www.padippakam.com


# புதிய பார்வை

பார்வை – 15 ஐப்பசி – 1992


## ஐரோப்பிய பாராளுமன்ற தூதுக்குழுவுடனான சந்திப்பில்

# தீர்வு புலிகளுக்கல்ல மக்களுக்கே என

## செயலாளர்நாயகம் தெரிவிப்பு

அண்மையில் கொழும்பு சென்ற ஐரோப்பிய பாராளுமன்ற தூதுக்குழுவினரை, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சந்தித்த போது, செயலாளர் நாயகம். தோழர். க. பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் "இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பது மக்களுக்கே தவிர புலிகளுக்கல்ல" எனக் கூறியுள்ளார்.

ஆரம்பத்தில் இங்குள்ள அரசியல் நிலைமை தொடர்பாக அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

முக்கியமாக தெரிவுக்குழு தொடர்பாகவும் அரசாங்கம், புலிகள் யுத்தச் சூழ்நிலைகள் தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது. இந்தநாட்டில் ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் பிரச்சனைக்கான தீர்வில் பெருமளவில் நாட்டம் கொண்டிருக்கவில்லை. என்றும் விளக்கம் அளிக்கப்பட்டது. புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்கட்சிகள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் அவற்றை ஓர் இடைக்கால தீர்வாக ஏற்றுக் கொண்டு தேசிய நீரோட்டத்தில் கலந்து கொண்டதையும் பின்னர் ஸ்ரீ லங்கா அரசாங்கம் இப் பிரச்சனைக்குத் தீர்வுகாணாமல் இழுத்தடிப்பதும் விளக்கப்பட்டது.

தமிழ் கட்சிகளைப் பொறுத்தமட்டில் வட-கிழக்கு இணைப்பு என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய கீழ்மட்டத் தீர்வாக இருக்க முடியும் என்றும் அவற்றை சிங்களக் கட்சிகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் விளக்கப் பட்டது. ஏழு தமிழ் கட்சிகளைப் பொறுத்த வரையில் ஒருமித்த குரலில் தமது குறைந்தபட்ச நிலைப்பாடுகளையும் விளக்கியுள்ளதாயும் எடுத்து கூறப்பட்டது.

மேற்படி குழுவினரின் சில கேள்விகளுக்குப் செயலாளர் நாயகம் பதிலளிக்கையில் முக்கியமாக வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பாக இரு கவுன்ஸில் அதை இணைக்கும் மேல் ஒரு சபை என்பது சாத்தியமா என வினவப் பட்டபோது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஒரு சட்டசபை, ஒரு அமைச்சரவை என்பதே ஏற்றுக்கொள்ளமுடியும் என்றும் மேற்சொன்ன வகையான திட்டம் இரு அமைச்சரவையையும் இரு கவுன்ஸில்களையும் குறிப்பதால் அவை ஏற்கனவே ஏழு தமிழ்கட்சிகளாலும் நிராகரிக்கப் பட்டது.

என்றும் கூறப்பட்டது. இதேபோல் அவர்கள் கேட்ட சர்வஜன வாக்கெடுப்பு முறையும் தமிழ்கட்சிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் எடுத்துக் கூறப்பட்டது. இறுதியாக கிழக்குமாகாணத்தின். எல்லைகளைப் பொறுத்தரை மீளவகுப்பது தொடர்பாக விவாதிப்பதற்கு தமிழ்கட்சிகள் தயாராக இருப்பதாகவும்கூறப்பட்டது. அடிப்படையில் இணைந்தமாகாணமும் அதற்கான முறையான அதிர்காரப் பகிர்வும் இருக்கும் பட்சத்தில் இனப்பிரச்சனைக்கு ஓர் அர்த்தபுஷ்டியான தீர்வொன்றை காணமுடியும் என்றும் எம்மால் கூறப்பட்டது.

இந்தியாவைப் புலிகள் ஏற்றுக்கொள்வார்களா? அதன்பின்னர் யுத்தத்தை நிறுத்துவார்களா, என்று அவர்கள் கேட்டபோது தீர்வு என்பது தமிழ்மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கே தவிர புலிகளுக்கல்ல என்றும் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வின் மூலமே புலிகளை மக்கள் மத்தியில் இருந்து அன்னியப்படுத்தலாம் என்றும் அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இந்த நாட்டில் இனப்பிரச்சனைத் தீர்வுக்கும் தமது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும் என்றும் எம்மால் எடுத்துக்கூறப்பட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் யுகோஸ்லவியா போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளில் கொண்டுள்ள அக்கறை இலங்கைப் பிரச்சனையில் காட்டப்படவில்லை என்றும் அவர்களுக்கு விளக்கப் பட்டது. தாம் அதற்காகத்தான் இங்கு வந்ததாகவும் ஐரோப்பிய பாராளுமன்றம் இப்பிரச்சனையில் கூடிய கவனம் (அக்கறை) எடுத்துள்ளதாகவும் ஏற்கனவே இலங்கைப் பிரச்சனை தொடர்பாக, ஐரோப்பிய பாராளுமன்றத்தில் ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும் அவர்களால் கூறப்பட்டது.

இச் சந்திப்புப்பற்றி தோழர். க. பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்:-

'நாம் அவர்களைச் சந்தித்ததானது அவர்களுக்குப் பிரச்சனையின் உண்மையான பரிணாமத்தை விளக்கிக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்று நம்புகின்றோம். அத்துடன் தமிழ் அமைப்புக்கள் கூட்டாகச் செயற்பட்டு வருவதை அவர்கள் பாராட்டியதுடன் அவை தொடரவேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். சிங்களக் கட்சிகள் இனவாத அடிப்படையில் மாற்ற முடியாத சில கடும் போக்குகளைக் கடைப்பிடிக்கும் அதேசமயம் தமிழ் கட்சிகள் ஓர் வளைந்து கொடுக்கும் போக்கை கடைப்பிடிப்பதாயும் அவர்கள் இப்பேச்சுவார்த்தையின் மூலம் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகின்றோம்' என தெரிவித்தார்.

## வெளிநாடுகளிலிருந்து திரும்பும் அகதிகளை ஐ.நா. பொறுப்பேற்கும்

வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகளுக்கு உதவ ஐக்கியநாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் முன்வந்துள்ளது.

வவுனியாவிலுள்ள ஆஸ்திக்குளத்தில் உள்ள சிதம்பரபுரம் என்னுமிடத்தில் 20 ஏக்கர் நிலத்தில் அகதிகள் முகாம் அமைக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

மன்னாரிலுள்ள மருதனாமடு என்ற இடத்தில் ஆயிரம்பேர் தங்கக்கூடிய அகதிகள் நலன்பிரிவு நிலையம் ஒன்று அமைக்கப்படுகிறது ஏனைய இடங்களில் நிலயங்கள் தெரிவுசெய்யப் படுகின்றன.

தற்போது இந்தியாவிலிருந்து விமானம்மூலமும், கப்பல்மூலமும் திரும்பும் அகதிகள் இந்த அகதிகள் நலன்பிரிவு நிலையங்களில் தங்க வைக்கப்படுவர்.

இதேவேளை அகதிகளுக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரண உதவித்தொகை அரைவாசியாக குறைக்கப்பட்டுள்ளது.

## காணமல் போனோர் பற்றி மனித உரிமைகள் இயக்கம்

இவ்வருடம் ஆகஸ்ட்மாதம் வரை இலங்கையில் 3589பேர் காணாமல் போயுள்ளனர் என மனிதஉரிமைகள் இயக்கம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பில் 2143பேர், அம்பாறையில்-648, திருகோணமலை-188, வவுனியா-5, மன்னார்-11, முல்லைத்தீவு-2, யாழ்ப்பாணத்தில்-54பேரும் காணாமல் போயுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 18 மாதங்களுக்கு மேல் 920 பேர் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். எதுவித பணிப்புரைகளுமின்றி இதுவரை 214 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நீதிமன்ற விடுதலை உத்தரவு கிடைத்தும் விடுதலை செய்யப்படாது 28 பேரும், உயர்நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் தொடர்ந்தும் 18 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அவ்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

போசாக்கின்மை, ஓயாத செல்வீச்சு, நிம்மதியற்ற வாழ்க்கை, சுகாதார வசதியின்மை என்பனவற்றால் வடக்கு கிழக்கில் பிறக்கும் குழந்தைகள் அதிகஅளவில் இறந்தே பிறக்கின்றன. இவ்வருடத்தில் மட்டும் 293 குழந்தைகள் இறந்து பிறந்துள்ளதாக யாழ் போதனாசலை பதிவேடு தெரிவித்துள்ளது.

## அரசு–புலிகள் பேச்சுவார்த்தை என்னும் கள்ளஉறவு

கொழும்பிலுள்ள 'கில்ரன் இன்ரர் நைசனல்' ஐந்து நட்சத்திர ஹோட்டலில் புலிகளுக்கும் அரசதரப்பினருக்கும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியுள்ளன. இவ்விரகசிய பேச்சுவார்த்தைக்குவேண்டி கில்ரன் ஐந்துநட்சத்திர ஹோட்டலை அண்டிய பகுதிகளில் பாதுகாப்புகள் பலப்படுத்தப் பட்டுள்ளன. இக் ஹோட்டலில் ஒருமாடி யாரும் நடமாட முடியாதபடி தடைசெய்யப்பட்டுள்ளது. இங்கு சிவில் உடைதரித்த இராணுவத்தினர் காவலில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாரிசிலிருந்து சென்றதிலகரும், திம்புவில் முதற்கட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட நரேன் என்ற சிவகுமாரனும் அரசுடனான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரகசியமாக நடைபெற்றுவரும் இப்பேச்சுவார்த்தையினை திசைதிருப்பவே பண்டத்தரிப்பில் சதுரங்கம் என்றபெயரில் இராணுவ நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டதாக நம்பப் படுகிறது.

இதேவேளை பத்திரிகையாளர் மாநாட்டில் இரண்டாம் கட்டப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப் பட்டுள்ளதா? என பத்திரிகையாளர் ஒருவர்கேட்டபோது அமைச்சர் லொக்குபண்டார மறுப்பு தெரிவிக்காது மௌனம் சாதித்துள்ளார்.

ஐ.தே. கட்சியின் செயலாளர் சிறிசேன கூரே மற்றும் ஐ. தே. கட்சி முக்கியஸ்தர் கணசலிங்கம் ஆகியோருடனான அரசதரப்பு குழுவினருடன் இரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தைநடாத்தவென நோர்வேயிலிருந்து லோபர் என்னும் உறுப்பினரும் சென்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை கடந்தமாதம் யாழ் பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த மகஜர் ஒன்று இங்கு கவனிக்கத்தக்கதாகும். அம் மகஜரில் 'அடுத்த ஒரு இராணுவநடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்பு அரசு அரசியல் தீர்வு ஒன்றை முன்வைத்தால் தாம் அதனை புலிகளிடம் எடுத்துக்கூறி பரிசீலனைசெய்ய வற்புறுத்தலாம் என' கேட்டிருந்தனர். அந்த மகஜரின் தொடர்ச்சியே இந்தப் பேச்சுவார்த்தை என அரசியல்வட்டாரத்தில் பேசப்படுகிறது

[redacted]

**'நாம் மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை' தோழர்.க.பத்மநாபா.**

படிப்பகம்

www.padippakam.com



## எமது பார்வையில்

ஸ்ரீ லங்கா இனவாத அரசாங்கமோ அல்லது தென்னிலங்கையின் 'முன்னணி' அரசியல் கட்சிகளோ தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வுஒன்றை முன்வைக்கும் என்ற நம்பிக்கை இப்போது முற்றாகபோது அற்றுப்போய்விட்டது.

இனப்பிரச்சனைக்கான அரசியல்தீர்வு.... இராணுவத்தீர்வு என்பவற்றைவிட இந்தப் பிரச்சனையை இழுத்தடிப்பதன் மூலமே தனது அரசின்ஆயுட்காலத்தை நீட்டிக்கொள்ள முடியும் என்றவகையில் பிரேமதாசா செயற்படுவது தெரிகிறது.

பாரிய அளவிலான அரசியல் ஊழல்கள், பணமோசடிகள், அரசியல் வன்முறைகள், அதிகார துஷ்பிரயோகங்கள் அனைத்தையும் மூடிமறைப்பதற்கும், எதிர்ப்பாளர்களின் குரல்வளைகளை நெரிப்பதற்கும் தேவை ஏற்பட்டால் அவர்களை கொலை செய்து அல்லது அவர்கள்மீது பலாத்காரம் பிரயோகித்து ஒரு வன்முறை அரசியல் நடத்துவதற்கும் இந்ததில்லுமுல்லுகளை தொடர்வதற்கும் யுத்தம்நீடிப்பதும் அதைக் காரணம்காட்டி அவசரகாலநிலைநீடிப்பதும் பிரேமதாசாவுக்கு அவசியமாகிறது

ஒருபுறம் வரவு செலவுத்திட்டத்தின் பெரும்பகுதி பணத்தை பாதுகாப்புச் செலவு என்றபோர்வையில் தமிழ்பேசும் மக்களுக்கெதிரான இன அழிப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் பிரேமதாசா மறுபுறம் மேடைகள்தோறும் தன்னை ஒரு சமாதான விரும்பியாக பிரகடனம்செய்துகொண்டு அமைதிக்காகவும், தீர்வுக்காகவும் தாம் உழைப்பதாக கூறிவரும் இரட்டைவேடம் அனைவரும் அறிந்ததே.

இதற்கிடையில் பிரேமதாசா சில தமிழ் அமைப்புக்களை தம்வலையில் வீழ்த்தி தமிழ்பேசும் மக்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு அவர்களையும் தம்மோடு இணைத்தார். அதுமாத்திரமல்ல இனப்பிரச்சனைதொடர்பாக அரசின்மீது தமிழ்பேசும் மக்கள் சார்பில் ஒருமுகப்படுத்தப்பட்ட அழுத்தம் பிரயோகிக்கப் படாமல் இருப்பதற்கும் பிரேமதாசா இந்தப் பிரித்தாளும் தந்திரத்தை பயன்படுத்திக் கொண்டார்.

தமது அரசியல் கபடநாடகங்களின் அடுத்த கட்டங்களையும் அவர் தற்போது அரங்கேற்ற ஆரம்பித்துள்ளார். அதில் ஒருகட்டம் மீண்டும்புலிகளுடன் சமாதானம் பேசுவதுபோல் பேசி அவர்களுக்கு ஓர் இடைவெளியை வழங்கி தாம் நல்லபெயர் எடுத்துக்கொண்டு தேவை ஏற்பட்டால் ஒரு தில்லுமுல்லு தேர்தலின்மூலம் மீண்டும் பதவியைக்கைப்பற்றுதல். அதேசமயம் புலிகளும் தேவையானநிதி, ஆயுதங்கள், ஆட்களை திரட்டிக்கொண்டு மூன்றாவது ஈழ யுத்தத்தை (EELAM WAR-3) ஆரம்பிப்பது. அது மாத்திரமல்ல புலிகளின் இரகசியத்தூதுவர்களுக்கும் பிரேமதாசாவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பிலும் ஐரோப்பியநாடுகளின் தலைநகரங்களிலும் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடந்துவருகின்றன. குறிப்பாக பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்கள் (இவர் முன்னாள் தமிழ்இடதுசாரி என்றும் இடையில் ஈரோசினரால் தமது ஆள்என்றும் கூறப்பட்டு இன்று பிரபாகரனை புறநானூற்றுத் தலைவனாகக்கண்டு ரசிகரனானவர்) அடிக்கடி கொழும்புக்கு வருவதும் இரகசிய சந்திப்புக்களை நடத்துவதும் காரணத்தோடுதான்.

இந்த தில்லுமுல்லுகள் போதாதென்று இப்போது இன்னுமொருபடி மேலேபோய் வடகிழக்கு மாகாண அரசின் தலைவராக இருந்த இராஜகாரியரை கொண்டுபோய் திருகோணமலையில் அமர்த்தி மீண்டும் இவர் இயங்குவார் என அறிவித்து குழப்பிய குட்டையை மேலும் குழப்பியுள்ளார்.

எந்த மாகாண அரசாங்கத்தை இயங்கவிடாமல் சீர்குலைத்தாரோ... எப்படி தமிழ்பேசும் மக்களுக்கு கிடைத்த சிறு சலுகைகளையும் பறித்தாரோ அந்தச் சபையின் தலைவர் திரும்ப இயங்குவார் என அறிவிப்புச் செய்ததன் காரணம் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கவே.
அதுவும் இராஜகாரியர் தாம் சார்ந்திருந்த கட்சியாகிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் விசாரணைக்குள்ளாகி இருக்கும் காலகட்டத்திலே பிரேமதாசா இந்த அரசியல் வித்தையை காட்டியுள்ளார்.

பல்வேறுபட்ட இராணுவ நடவடிக்கைகள் மூலமே இராணுவக்கால்கள் மேலும்மேலும் எம்மண்ணில் பதிகின்றன. திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகள் மூலம் தினம் தோறும் திருமலையும், அம்பாறையும், வவுனியாவும் அங்குலம் அங்குலம் அங்குலமாக பறிபோகிறது. அரசின் திட்டமிட்ட பொருளாதாரத்தடை எங்கள் மக்களை சொந்த மண்ணிலேயே பிச்சைப்பாத்திரங்களுடன் நடமாடவிட்டிருக்கிறது. அரசின் அரசியல் கயமை பிரித்தாளும் தந்திரத்தின்மூலம் மீண்டும் எமதுஒற்றுமைக்கு ஆப்பு வைத்திருக்கிறது.

இந்த அவலத்தின் பின்னும் மக்களுக்காக சிந்திக்காத அரசியல்... மக்களின் நலனை நோக்கி நகராத சமூகப்பார்வை....மக்களின் துன்பத்தை சுமக்காத இலக்கியம் .....தீர்வுக்கான பாதைக்கு வழிகாட்டாத புத்திஜீவிகள் இருப்பதும் இல்லாமல் இருப்பதும் எல்லாமே ஒன்றுதான்.

வசைமொழிகளும், வாக்குவாதங்களும், தத்துவப்பிரகடனங்களும், சித்தாந்த மோதல்களும் இன்று எம்மக்களுக்கு வாழ்வு கொடுக்காது என்பதை மீண்டும் ஒருமுறை அழுத்தமாக தெரிவிக்கிறோம்.

பாசிச அரசை தகர்ப்பது.... புலிகளின் பயங்கரவாதத்தை எதிர்ப்பது இதை ஒருங்கிணைத்து முன்னெடுக்காவிட்டால் இலக்கை நோக்கி சிறுதூரம்கூட காலடி எடுத்துவைக்கமுடியாது. அமைதிக்கான தீர்வு என்பதை விடுத்து அழிவுக்கான தீர்வையே நமது இனம் காணவேண்டி வரும்.

# குடாநாட்டில் பூமியதிர்ச்சி

## 80000 பேர் பாதிக்கப்பட்டனர்

குடாநாட்டின் தீவுப்பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ள இராணுவத்தினர் கரையோரப்பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக "பூமியதிர்ச்சி" என்னும் பெயரில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்து தொடர்ந்து வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக பலாலி, கீரிமலைப் பகுதிகளில் இராணுவநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பாலாலி, கீரிமலை, சேந்தான்குளம் வழியாக மாதகலை நோக்கியும் இளவாலை வழியாக பண்டத்தரிப்பையும் நோக்கியும் முன்னேறினர்.

இதேவேளை பலாலியிலிருந்து தெல்லிப்பழை வழியாக பெரியவிளான் ஊடாக பண்டத்தரிப்பை நோக்கி முன்னேறினர்.

கீரிமலை, இளவாலை, பெரியவிளான், மாதகல் பகுதிகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. இளவாலையிலுள்ள மாரீசன்கூடலில் இராணுவ தளம் ஒன்றை இராணுவத்தினர் அமைத்து நிலைகொண்டுள்ளனர்.

மாதகலில் புலிகள் அமைத்திருந்த கடற்புறா என்ற கடல்தளத்தை இராணுவத்தினர் கைப்பற்றினர். இதில் எதுவித எதிர்ப்பையும் எதிர்நோக்கவில்லை என இராணுவ தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

தெல்லிப்பழையிலிருந்து முன்னேறிய இராணுவத்தினர் சிறுவிளான் என்ற இடத்தில் சிறிது எதிர்ப்பை எதிர்நோக்கியதாயும் தாம் அதை முறியடித்து பெரியவிளான் வரை முன்னேறியதாயும் இராணுவத்தினர் தெரிவித்ததாய் பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

இப் பூமியதிர்ச்சியை பிரச்சாரம் செய்ய அரசு, பத்திரிகைகுழு ஒன்றை கொழும்பிலிருந்து அழைத்துசென்று இராணுவம் கைப்பற்றியுள்ள பகுதிகளை காட்டியுள்ளது.

இப்பகுதிகளில் உள்ளமக்கள் அகதிகளாக மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, சித்தங்கேணிப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இளவாலையிலிருந்து உடுத்தஉடைகளுடன் ஓடிச்சென்றபலர் பின்பு தமது இருப்பிடங்களை பார்வையிட திரும்பிவந்தபோது இராணுவத்தினர் துப்பாக்கிபிரயோகம் செய்ததில் பலர் மாண்டுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

மாதகலில் கத்தோலிக்க மதகுருமார் உட்பட சுமார் 300 பேர் உள்ஙிர் கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகு முன்பு பொதுமக்கள் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடையுமாறு கோருவதும் புலிகள் தமது பாதுகாப்பு கருதி மக்களை போகவிடாது தடுப்பதும் நடந்துவந்துள்ளது ஆனால் இம்முறை புலிகளின் வேண்டுகோளை மாதகலில் மக்கள் ஏற்காது ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.
இராணுவம் கைப்பற்றிய இடங்களில் பொலிஸ்நிலையங்களை அமைப்பதற்கு இராணுவம் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. காங்கேசன்துறை, இளவாலை, பண்டத்தரிப்பு பகுதிகளில் பொலிஸ்நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

இளவாலையில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், கூட்டுறவுக்கடை, சுகாதார நிலையம், பொலிஸ்நிலையம் ஆகியன அமைக்கப்படும் என கூட்டுப்படை தலைமையக தளபதி தெரிவித்துள்ளார்.

வடபகுதிமக்கள் திருகோணமலை அல்லது கொழும்புசெல்வதாயின் புலிகளுக்கு கப்பம் கொடுக்கத்தேவையில்லை. கடற்படையினரின் படகுகளில் பிரயாணம் செய்யலாம் என தளபதி வனசிங்கா தெரிவித்துள்ளார்.

பூமியதிர்ச்சியில் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் பொறுப்பாளரான ராஜ் என்ற சோமசுந்தரம் சற்குணம், திருமலையை சேர்ந்த கணேசன், தனுக்காயை சேர்ந்த வன்னி என்ற கணபதிப்பிள்ளை கணநாதன் உட்பட எட்டுப்பேர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களில் முக்கியமான புலி உறுப்பினர்களாகும். இவ்விழப்புக்கள் புலிகளுக்கு பேரிழப்பு என பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இராணுவ தாக்குதல் இடம்பெற்ற இடங்களிலிருந்து இதுவரை வெளியேறிய மக்கள் மானிப்பாய். சண்டிலிப்பாய் பகுதிகளில் தங்க இடமின்றி வீதியோரங்களில் தங்குகின்றனர்.

புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் அகதிகளாக்கப்பட்ட மக்களை சென்று பார்வையிட்டுள்ளனர். தம்மைவிட்டு பிரிந்து வேறுஇடங்களுக்கு ᵔ4ய ஆண்பிள்ளைகளையும் குடும்பத்தலைவர்களையும் தம்முடன் ஒன்றுசேர்த்து வைக்குமாறு அழுது குழறியபெண்கள் அதிகாரிகளிடம் முறையீடு செய்துள்ளனர்.

பூமியதிர்ச்சியில் எண்பதினாயிரத்துக்கு மேற்பட்டமக்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இடவசதியின்மை, சுகாதார வசதியின்மையால் கஷ்டப்படுகின்றனர். இதனால் பலர் தொற்றுநோய்களுக்கு ஆளாகியுள்ளனர்.

மீண்டும் தமது கைப்பற்றப்பட்ட இடங்களிலிருந்து பண்டத்தரிப்பு ஊடாக இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது. இதற்கு சதுரங்கம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தம் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் இன்றுவரை நிறைவேறவில்லை. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட இலங்கை அரசும் சரி, இந்திய அரசும் சரி இப்படி ஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதையே மறந்துவிட்ட நிலையில் இருக்கின்றது.

இந்த இடைப்பட்ட ஐந்துவருடகாலத்தில் தான் எத்தனை மாற்றங்கள்! இலங்கை–இந்திய உறவில், சர்வதேச அரசியலில், ஈழப்போராளிகளுக்கும், இந்தியாவிற்குமிடையேயான உறவில் ஈழப்போராளிகளுக்கிடையேயான உறவில் எல்லாவற்றிலும் தலைகீழான மாற்றங்கள். ஆனால் பிரச்சனைகள் இன்னமும் அப்படியே இருக்கின்றன.

இலங்கையிலும் தமிழகத்திலும் தமிழ்மொழி பேசும்மக்கள் இருக்கும்வரை இப்பிரச்சனையை தீர்ப்பதில் தனக்குள்ள பொறுப்பை இந்தியஅரசு தட்டிக்கழித்து விடமுடியாது. இப்பிராந்தியத்தில் உள்ள பூகோளஅரசியலில் இந்தியாவுக்கு இருக்கும் பொறுப்பின் காரணமாக, மீண்டும் இந்தியஅரசு ஈழத்தமிழர் பிரச்சனையைத்தீர்ப்பதில் தனது பங்கைச்செலுத்தியே ஆகவேண்டும்.

ஈழத்தமிழர் பிரச்சனையில் இந்தியாவின் பங்களிப்பு 'அவசியம் எனக்கூறுகின்றபொழுது, இதுவரை இந்தியஅரசு எடுத்த நடவடிக்கைகள் எல்லாம் வீணாகி இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி புலிகளால் படுகொலை செய்யப்படுமளவிற்கு விசயங்கள் சென்றுவிட்டனவே என்ற கசப்புணர்வு எல்லோர் மத்தியிலும் ஏற்பட்டிருக்கின்றது' இந்நிலையில் சரியான திசைவழியில் இப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான பங்களிப்பை இந்தியஅரசு வழங்குவதற்கு இப்பிரச்சனையில் சம்பந்தப்பட்ட அனைவரது கடந்தகாலச் செயற்பாடுகளையும் அவசிஆராய்வது அவசியமாகின்றது.

கடந்த நாற்பதுஆண்டுக்காலமாக இலங்கைத் தமிழ்மக்கள் சிங்களப் பேரினவாதச் சக்திகளினால் அடக்கி ஒடுக்கப்படுவதும், அதிலிருந்து விடுபட்டு தமது உரிமைகளுக்காக ஈழமக்கள் முதலில் ஜனநாயக வழிமுறைகளிலும் பின்பு வன்முறை மூலமும் போராட ஆரம்பித்ததன் தார்மீக நியாயத்தை எவரும் மறுத்துவிடமுடியாது. இந்த வகையில் போராடுகின்ற ஈழமக்கள் தமதுஉரிமைகளை வென்றெடுப்பதற்குச் சர்வதேச நாடுகளின் ஆதரவும், அங்கீகாரமும் அவசியம். அந்தவகையில் முதற்கட்டமாக ஈழப்போராட்டத்திற்கான ஆதரவைத் தமிழகத்திலும், இந்தியாவிலும் திரட்டுவதற்கு ஈழப்போராளிகள் முற்பட்டனர்.

தமிழகமக்களும் மொழியாலும், இனத்தாலும், காலாச்சாரத்தினாலும் ஒன்றான ஈழத்தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்குத் தமது முழு ஆதரவையும் வழங்கினார்கள்.

மக்கள் உணர்ச்சிக்கொந்தளிப்பிற்குள்ளானார்கள். தமிழகமக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டியகட்டாயம், கூட்டாட்சி அமைப்பான இந்திய அரசுக்கு இருந்தது ஈழப்போராட்டத்தை ஒடுக்குவதற்கு இலங்கை [redacted] அரசு மேற்கத்திய நாடுகளின் இராணுவ உதவியைத் பெற்றுக்கொண்டது. இதனால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு

**இந்திய–இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தாகி ஐந்து வருடங்கள் பூர்த்தியாகியதை முன்னிட்டு தினமணி பத்திரிகையில் வெளியாகிய இக்கட்டுரை இங்கே மறுபிரசுரமாகிறது.**

**நன்றி: தினமணி.**

அச்சுறுத்தல் ஏற்பட்டமையாலும் இந்தியஅரசு ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவான நிலையை எடுத்தது. பெருமளவு இலங்கை அகதிகளைத் தமிழகத்தில் அனுமதித்ததுடன், இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஈழப்போராளிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு பல முன்முயற்சிகளையும் எடுத்தது.

ஈழத்தமிழர்களின்பால் அனுதாபமும், தமிழர் பிரச்சனை விரைவில் தீர்க்கப்படவேண்டும் என்ற அக்கறையும் பெரும்பான்மை, தமிழக மக்கள் மத்தியில் இருந்தமையால் இப்பிரச்சனையைத் தமது கையிலெடுத்து, தமிழகமக்களின் ஆதரவைப்பெற்று தாம் ஆட்சி அமைத்துக்கொள்ள தி.மு.க.வும், ஆ.தி.மு.க.வும் மற்றும் உதிரி மாநிலக் கட்சிகளும் முற்பட்டன.

இவர்கள் தமது சொந்த சுயவிருப்பு, வெறுப்புக்களின் அடிப்படையில், சுய அரசியல் லாபங்களுக்கு மட்டுமே ஈழப்பிரச்சனையை பயன்படுத்தினார்கள்.

ஈழப் போராளிகளை ஒன்றுபடுத்தும் சந்தர்ப்பம் எம்.ஜி. ஆருக்கும், கருணாநிதிக்கும் ஏற்பட்டது. ஆனால் அதை அவர்கள் சரிவரப் பயன்படுத்தாமையால், போராளிகளுக்கிடையேயான பிளவைக் கூர்மைப்படுத்து முகமாகவே செயற்பட்டார்கள்.

பல சந்தர்ப்பங்களில் தி.மு. க. ஈழப்போராட்டத்தை தமிழகப் பிரிவினைவாதத்துடன் ஒன்றுபடுத்திப் பேசியது. உலகெங்குமுள்ள தேசவிடுதலை இயக்கங்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகள், திராவிடக் கட்சிகளுக்கு வழிகாட்டுவதற்கான முன்முயற்சிகளை எடுப்பதற்குப் பதிலாக, தீர்மானங்களைப் போடுவதோடு மட்டுமே தமது பங்களிப்பை நிறுத்திக் கொண்டனர்.

# அமைதிப்படை வெளியேறியபின் பிரச்சனை தீர்ந்துவிட்டதா?

## ஈழப்போராளிகளும் தமிழகமும்

ஈழமக்களின் உரிமைகளுக்காகப் போராடுகின்ற ஈழப்போராளிகள், தமிழகமக்கள் மத்தியில் தமக்கு ஆதரவான சூழலை உருவாக்குவதற்கு முன்முயற்சி எடுப்பது அவசியமாக இருந்தது. தமிழகமக்களின் ஆதரவின் ஊடாக, இந்தியாவின் ஆதரவைத் தமது போராட்டத்திற்குப் பெறுவதற்குப் ஈழப்போராளிகள், தமிழகமானது தெற்காசியப் பிராந்தியத்தில் மிகவும்வலிமைபொருந்திய இந்தியாவின் ஒரு மாநிலம் மட்டுமே. அது சுதந்திரநாடு அல்ல என்பதைத் தெளிவாக புரிந்துகொண்டு செயற்பட்டிருக்க வேண்டும். இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கும், 'இறையாண்மைக்கும் குந்தகம் ஏற்படுவதைத் துண்டாதவகையில் ஈழப்போராளிகளின் செயற்பாடுகள் இருந்தால் மட்டுமே அவர்கள் சுதந்திரமாகவும், சுலபமாகவும் செயற்பட்டுத் தமிழகமக்களின் ஆதரவை முழுமையாக பெற்றிருக்கமுடியும். இல்லாவிடில் மத்திய அரசின் கோபத்திற்கு உள்ளாவதுடன், ஈழவிடுதலைக்கு ஆதரவான எந்தச்செயலையும் தமிழகத்தில் செய்யமுடியாதநிலையே ஏற்படும் என்பதை ஈழப்போராளிகள் முன்னரே தெளிவாகப் புரிந்திருக்க வேண்டும்.

இப்படி இவர்கள் செயற்படாமயினாலேயே இன்று தமிழக, இந்திய ஆதரவைத் இழந்து, ஈழத்தமிழர்களுக்கு எதுநடந்தாலும் ஏன் என்று கேட்பதற்கு யாரும் இல்லாதநிலை ஏற்பட்டிருக்கின்றது.

இப்படிச் சூழ்நிலை உருவானதிற்கு முதற்காரணம் தமிழீழ விடுதலைப்புலிகளாவர். ஈழமக்களின் அபிலாஷைகளுக்காகப் போராடுகின்ற ஈழ விடுதலை இயக்கங்கள், தமிழக மக்களின் ஒட்டுமொத்தமான ஆதரவைப் பெறுவதற்காகத் தாம் ஒன்றுபட்டு நிற்பதோடு மாத்திரமல்லாமல் தமிழக அரசியலில் தலையிடாது தமிழகத்தில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளின் ஆதரவைத்திரட்டியிருக்க வேண்டும். ஆனால் புலிகளின் பாசிச ஜனநாயக விரோதச் செயற்பாடுகளினால் ஈழவிடுதலை இயக்கங்கள் ஒற்றுமையாக இருக்கமுடியவில்லை. மேலும் புலிகள் தமிழகஅரசியலில் தலையிட்டு, எம்.ஜி ஆருக்கு ஆதரவாகவும், கருணாநிதிக்கெதிராகவும் பேசியதும் பின்பு கருணாநிதிக்காதரவாகவும் ஜெயலலிதாவுக்கெதிராகவும் கருத்துத்தெரிவித்தமையையும் தமிழக அரசியலில் புலிகளின் அப்பட்டமான தலையீடாகும். அத்துடன் அவர்கள் நிற்கவில்லை. இந்திய அமைதிப்படையை எதிர்த்தார்கள். தமிழகப் பிரிவினைச்சக்திகளுக்கு ஆயுத உதவி அளித்தார்கள். இறுதியில் இந்தியாவின் முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியையே கொலைசெய்தார்கள். இதனால் ஈழமக்களின் நியாயமான உரிமைப் போராட்டம் இன்று பயங்கரவாதப் போராட்டமாக விந்தரிக்கப்பட்டுள்ளது.

## தமிழக அரசியல் கட்சிகளின் செயல்

இந்நிலையில் ஈழப்போராட்டத்தில் தமிழக அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளையும் ஆராய்வது அவசியமாகின்றது. 1983ம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து அகதிகள் தமிழகத்திற்கு வந்தனர். அகதிகளின் சோகக்கதைகளை கேட்டுத் தமிழக

காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை அது ஸ்தாபனரீதியாக ஈழப்பிரச்சனையில் தாக்கத்தை விளைவிக்கக் கூடியவகையில் செயல்படவில்லை.

## ஈ. பி. ஆர். எல். எவ். அணுகுமுறை

ஈழப்போராட்டத்திற்கான தமிழக மக்களின் ஆதரவைப் புலிகளின் செயல்பாடுகள் சீர்குலைத்தபோதிலும், ஈழவிடுதலை இயக்கங்களில் ஈ.பி.ஆர்.எல்.எவ். எனப்படுகின்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மட்டும்தான் எத்தகைய நெருக்கடிகள் வந்தபோதும் தமிழக அரசியலிலும், இந்திய அரசியலிலும் தலையிடாததோடு தமிழக அரசியல்கட்சிகளின் கைப்பாவையாகத் தன்னை மாற்றிவிடாது நிதானத்துடன் நடந்து கொண்டது. அதேநேரத்தில் தனது சர்வதேசக் கொள்கைகளின் அடிப்படையில் உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் ஓர் அங்கமாகிய இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கங்களுடன் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்திக்கொள்ள முயன்றது.

மேலும் ஈழப்போராட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு, ஈழப்போராளிக் குழுக்களை ஒன்றுபடுத்துவதற்கு முன்முயற்சி எடுத்ததோடு மட்டுமல்லாமல், தமிழகஅரசியல் கட்சிகள் எல்லாவற்றுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி எல்லா அரசியல் கட்சிகளினதும் ஆதரவைப் பெறுவதற்கு முயன்றது. இந்த இயக்கத்தையும், அதன் மறைந்த செயலாளர் பத்மநாபாவையும், தமிழக அரசியல் கட்சிகளும்சரி இந்திய அரசும்சரி ஆரம்பத்திலேயே அடையாளம்கண்டு ஆக்கமும் ஊக்கமும் அளித்திருந்தால், இலங்கைத் தமிழர் பிரச்சனை சரியான திசைவழியில் தீர்க்கப்பட்டிருக்கும்.

## இந்திய– இலங்கை ஒப்பந்தம்

புலிகளின் பாசிச, ஜனநாயக விரோதச் செயற்பாட்டினாலும், தமிழக அரசியல் கட்சிகளின் பிற்போக்குத்தனமான அரசியல் நிலைப்பாட்டினாலும் ஈழப்போராட்டத்தின் கூர்மை மழுங்கடிக்கப்பட்டு தமிழ்ப்பிரதேசங்களைத் சிங்கள இராணுவத்தினர் முழுவதுமாகத் தம்கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகின்ற காலகட்டத்தில் தான் இந்திய- இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப் பட்டது.

இவ் ஒப்பந்தத்தின் சரத்துக்கள் ஈழத்தமிழர்களின் பிரச்சனைக்கு முழுமையான தீர்வாக அமையாவிட்டாலும் முழுமையான தீர்வுக்கான ஆரம்பமாகவும், ஈழத்தில் அமைதிச் சூழலை உருவாக்குவதற்கு ஏதுவானதாகவும் இருந்தது. ஆரம்பத்தில் புலிகள் இதனை ஏற்றுக்கொண்டனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்ளிட்ட மற்றைய போராளி இயக்கங்களும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஓர் இடைக்காலத் தீர்வாக ஏற்றுக்கொண்டனர் இந்த ஒப்பந்தத்தைக் நிறைவேற்றுவதற்கு இந்தியஅரசு கடுமையானமுயற்சிகளை எடுக்க வேண்டியிருந்தது. ஒப்பந்தத்தை நிறைவேற்ற முயற்சி எடுத்ததன் பலனாக தமிழர்களுக்கு என ஓர் மாகாணஅரசு ஏற்படுத்தப்பட்டது. அம் மாகாணஅரசு உருவாக்கப்பட்ட ஒருவருடகாலத்திலேயே புலிகளாலும், பிரேமதாச அரசாலும் கலைக்கப்பட்டது.

(எட்டாம் பக்கம் பார்க்க..........)

www.padippakam.com



# அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

## அன்பார்ந்த தமிழ்பேசும்மக்களே!

ஐரோப்பியாவில் மாதம் தோறும் ஒரு கட்சிப்பத்திரிகையை வெளிக்கொண்டு வருவதில் நாம் தாராளமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இது எமக்கு மாத்திரமல்ல பல்வேறு அரசியல் சமூக இலக்கிய அமைப்புகளுக்குமுள்ள வழமையான பிரச்சனை தான்.

ஆனால் முன்னெப்போதையும் விட இப்போது ஐரோப்பாவில் வெகுதாராளமாகவே கலர் கலராக புலிகளின் ஒறிஜினல் பத்திரிகைகளும், பினாமிப் பத்திரிகைகளும் பெரும்பாலும் இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கலர் பத்திரிகைகளை அடிக்க இவர்களுக்கு காசு எப்படி வருகிறது... இவற்றை இலவசமாக கொடுப்பதால் இவர்களுக்கு நட்டம் ஏற்படாதா என்பது போன்ற கேள்விகளையெல்லாம் கேட்டு நாங்கள் மண்டையை உடைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் எதுவுமில்லை.

இந்த தமிழ் மா::பியா கும்பலுக்கு பணத்தை திரட்டுவதற்கான சகலவழிகளும் அதே சமயம் பணத்துக்காக ஆட்களை மிரட்டுவதற்கான சகலவழிகளும் அத்துபடி. அதனால் பணப்பிரச்சனையை ஒருபுறம் வைத்துவிட்டு தமது வெளியீடுகளில் எதை எழுதித்தள்ளுகிறார்கள் என்பதைப்பற்றி பார்ப்போம்.

ஒரு பாசிசக்கும்பலான புலிகள் தம்மை ஒரு சமூக சீர்திருத்த முற்போக்கு சக்தி என்ற மாயையை மக்களிடம் பரப்புவதற்கு இந்த வெளியீடுகளை தாராளமாகவே பயன்படுத்துகின்றன. முன்னாள் தமிழ்இலக்கியவாதிகளும் தற்போதைய பிரபாகரன் ரசிகர் மன்றப் பொறுப்பாளர்களுமான சொக்கன், சிரித்திரன் சுந்தர், அலை யேசுராசா, புதுவை இரத்தினதுரை போன்றவர்களின் எழுத்துக்கள் விலங்குகளோடு கலந்துவிட்ட விலங்கியப் பேராசிரியர்கள் சிவத்தம்பி போன்றவர்களின் 'பேருரை'கள் எல்லாவற்றையும் பிரசுரித்து தங்கள் 'முற்போக்கு' வாதத்தை வலியுறுத்துகின்றனர்.

அது மாத்திரமல்ல கொலைவெறியும் குரூரமும் கொண்ட தங்கள் தலைவர்களான பிரபாகரன், மாத்தையாபோன்றவர்களை இலக்கியவாதிகளாகக் காட்டும் வித்தைகளைக் கூட இந்த வெளியீடுகள் செய்கின்றன. இரத்தத்தின்மீது தாகம் கொண்டவர்களை இலக்கியத்தின் மீது காதல் கொண்டவர்களாகக் காட்ட பிரபாகரனின் கவிதை, மாத்தையாவின் இலக்கிய விமர்சனம் என்றெல்லாம் மாய விளையாட்டுக்களைக் காட்டுகின்றன.

பல பத்திரிகைகளை விழுங்கி பத்திரிகையாளர்களின் குரல்வளைகளை நெரித்து...உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் எழுதுபவர்களை மிரட்டிய புலிகள் சமீபகாலங்களில் கூட செல்வி போன்ற பல்கலைக்கழக மாணவர்கள் மணியம் போன்ற புத்தக நிலைய உரிமையாளர்களையெல்லாம் கடத்தி அவர்களை முகவரியில்லாதவர்களாக்கிய புலிகள் ஏதோ யாழ்ப்பாணத்தில் கருத்துச் சுதந்திரத்தை தாம் வாரிவழங்கியுள்ளதாகவும் அதனால் பல பத்திரிகைகள் அங்கிருந்து வெளிவருவது போன்றபிரமையை இந்தவெளியீடுகள் மூலம் ஏற்படுத்தி வருகின்றனர்.

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே! இராணுவரீதியாக தமக்குஏற்பட்டுவரும் தோல்விகளை மூடிமறைத்து பொய்களையும் புனைகதைகளையும் தங்குதடையின்றிஅவிட்டுவிட்டு வசனங்களையும், சோகங்களையும் வைத்து இந்த வெளியீடுகள் வாணவேடிக்கை காட்டிவருகின்றன.

ஸ்ரீ லங்கா இராணுவமோ எமது எல்லைகளைக் கடந்து இன்று ஏழாலை...அளவெட்டி...பண்டத்தரிப்பு என்று வீட்டுக் கொல்லை வரை வந்துவிட்டது.

உண்பதற்கு உணவில்லாமலே சொந்த மண்ணிலேயே மக்கள் பிச்சைப்பாத்திரம் ஏந்தித்திரிகையில் தாங்கள் அறிமுகப்படுத்திய புதியமுறைகளால் யாழ்ப்பாணத்தில் உணவு நிரம்பி வழிவதாகவும் உணவுப்பொருட்களை வைப்பதற்கு இடமில்லாத நிலை இருப்பதாகவும் இந்தவெளியீடுகள் அள்ளித்தெளிக்கும் பொய்கள்...

கொல்லைக் கதவுகளை எதிரிப்படைகள் தட்டி எங்கள் மண்ணின் பாதிக்குமேலான பகுதியை இராணுவத்திற்கு தாரை வார்த்த பின் இந்தத் தங்கள் வெளிநாட்டு வெளியீடுகளில் "இது எங்கள் பொலிஸ்படை" "இது எங்கள் அணிவகுப்பு" "இது எங்கள் பொலிஸ் நிலையம்" "இது எங்கள் கடற்படை" என்றெல்லாம் கலர்ப்படங்களுடன் கதையளக்கும் கெட்டித்தனம்....

> ஒரு பாசிசக் கும்பலான புலிகள் தம்மை ஒரு சமூகசீர்திருத்த முற்போக்கு சக்தி என்ற மாயையை மக்களிடம் பரப்புவதற்கு இந்த வெளியீடுகளை தாராளமாகவே பயன்படுத்துகின்றன. முன்னாள் தமிழ் இலக்கிய வாதிகளும் தற்போதைய பிரபாகரன் ரசிகர் மன்றப் பொறுப்பாளர்களுமான சொக்கன், சிரித்திரன்சுந்தர், அலை யேசுராசா, புதுவை இரத்தினத்துரை போன்றவர்களின் எழுத்துக்கள், விலங்குகளோடு கலந்துவிட்ட விலங்கியல் பேராசிரியர்கள் சிவத்தம்பி போன்றவர்களின் பேருரைகள் எல்லாவற்றைறம் பிரசுரித்து தங்கள் முற்போக்கு வாதத்தை வலியுறுத்துகின்றனர்.

அன்பார்ந்த தமிழ்பேசும்மக்களே!

பொய்யும் புரட்டும் ஏமாற்றுத்தனமும், கயமையும் எப்படியெல்லாம் இந்த புலிகளின் வெளிநாட்டு வெளியீடுகளில் கலந்திருக்கின்றன என்பதற்கு ஒரு சிறு உதாரணம்:- சமீபத்திய இத்தகையவெளியீடுகளில் ஒன்றில் இதர தமிழ்கழக்கள் பற்றிய கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது. அக்கட்டுரையில் மற்றைய தமிழ்கழக்கள் எப்படி அன்று இந்தியாவின் வலைக்குள் விழுந்து பயிற்சி எடுத்து ஆயுதம் வாங்கி இந்தியாவின் கைக்கூலிகளாக மாறினார்கள் என்பதையும் இப்போது அதே கழகங்கள் எப்படி ஸ்ரீ லங்கா அரசினால் வசப்படுத்தப்பட்டு ஸ்ரீ லங்கா அரசின் கைக்கூலிகளாக இயங்குகிறார்கள் என்பது பற்றி விலாவரையாக விபரித்து இருந்தார்கள். அதே சமயம் புலிகளாகிய தாம் மட்டும் இந்த இந்திய–ஸ்ரீ லங்கா அரசுகளின் வலையில் விழவில்லை என்றும் வசப்படவில்லை என்றும் ஆயுதமோ, பணமோ வாங்கவில்லை என்றும் பயிற்சி எதுவுமே எடுக்கவில்லை என்றும் தனித்துநின்று தங்கள் சொந்தக்காலில் நின்று இந்திய, ஸ்ரீ லங்கா அரசுகளுக்கெதிராக போராடிவருவது தாம் மாத்திரமே என உறுமிச் சத்தியமும் செய்திருந்தார்கள்

தொடர்ந்து நடந்துவரும் யுத்தத்தின் காரணமாக மக்களின் ஞாபகசக்தி மழுங்கிவிட்டது என்றபுலிகளின் நினைப்போ அல்லது "மக்கள் மடையர்கள்" என்ற புலிகளின் வழமையான எண்ணப்பாடோதான். இது போன்ற பல பொய்களை வெளிநாடுகளில் வெளியிட வைத்திருக்கிறது.

1983இன் பின் புலிகள் எங்கே பயிற்சி எடுத்தார்கள் யாரிடம் ஆயுதம் வாங்கினார்கள் என்பதெல்லாம் அனைவரும் அறிந்தது. அநுராதபுர படுகொலைகள் புலிகள் எவ்வளவு தூரம் எஜமான விசுவாசத்தோடு இருந்தார்கள் என்பதன் ஆதாரம் "ஒப்பரேசன் லிபரேசனில்" ஸ்ரீ லங்காஇராணுவத்திடம் மக்களைப் பலிகொடுத்துவிட்டு தாம் தப்பிஓடி மீண்டும் இந்தியாவின் கால்களில் விழுந்ததும் பெங்களூர் பேச்சுவார்த்தைகளின் போதும், டெல்லிப் பேச்சுவார்த்தைகளின் போதும் "எங்களைத்தான் இந்தியா அங்கீகரித்தது. எங்கள் தலைவர்தான் தமிழீழமக்களின் தலைவர்" என்று கட்டம்போட்டு அறிக்கைகள் விட்டபோதும் புலிகளின் நிலை என்ன?

இந்திய–ஸ்ரீ லங்கா ஒப்பந்தத்தின் பின் இந்திய இராணுவம் எமது மண்ணுக்கு வந்தபோது இந்திய இராணுவ வாகனங்களில் ஒரு புறம் புலிக்கொடியும் மறுபுறம் இந்தியக் கொடியும் பறக்கவிட்டு திரிந்த போது புலிகளின் நிலை என்ன?

அதற்குப்பின் 1989 இல் ஸ்ரீ லங்கா இனவாத அரசுடன் நேசக்கரம் நீட்டியபோதும் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் சுகவாசம் அனுபவித்தபோதும், ஹெலிகொப்டர்களில் பறந்து ஜீப்களில் வலம்வந்தபோதும், ஆயுதங்களையும், பெருந்தொகை பணத்தையும் வாங்கிய போதும், அதிரடிப்படையினருடன் இணைந்து அம்பாறையிலும், கொழும்பிலும் பலஇளைஞர்களைக் கைதுசெய்து காணாமல் போகப்பண்ணிய போதும்... ஸ்ரீ லங்கா இராணுவத்தினருடன் இணைந்து அம்பாறை திருக்கோவில் போன்ற இடங்களில் தமிழ் தேசியஇராணுவ முகாம்களை தாக்கி பலநூற்றுக்கணக்கான இளைஞர்களை கொன்றழித்த போதும்.... ஸ்ரீ லங்கா அரசின் அனுசரணையுடன் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்ற கூட்டணித் தலைவர்களையும் சாம் தம்பிமுத்து போன்ற எமது பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொன்றழித்தபோதும் புலிகள் ஸ்ரீ லங்கா அரசோடு உறவுவைக்காமல் என்ன செய்தார்கள். ஸ்ரீ லங்காஅரசின் கைக்கூலிகளாக இயங்காமல் வேறு எப்படிச் செயற்பட்டார்கள்.

அரசின்மீது எதிர்கட்சிகள் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவந்த காலகட்டத்தில் பிரேமதாசாவின் பதவிக்கு ஆபத்து வந்துவிடுமே என்று அலறித்துடித்து அவரைக் காப்பாற்ற ஈரோஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை தயார்செய்து புலித்தலைமை அனுப்பியது பிரேமதாசாவின் மீது இன்னும் அவர்கள் கொண்டிருக்கும் விசுவாசத்தை இல்லாமல் வேறு எதைக் காட்டுகிறது.

புலிகளும் ஸ்ரீ லங்கா அரசும் பகிரங்க நட்புக் காட்டிய நேரத்தில் திருகோணமலையில் நடந்த மாத்தையாவின் கூட்டத்தில் கதிரை அடுக்கிய இளைஞர்களைக் கூட விட்டுவைக்காத ஸ்ரீ லங்கா இராணுவம் புலிகளின் பினாமிப் பிரமுகர்கள் புலிகளின் மேடைகளிலே பகிரங்கமாகத் தோன்றி தலைவரின் புகழ் பாடும் பிரமுகர்களையெல்லாம் அடிக்கடி கொழும்பு வந்து நடமாட அனுமதிப்பது எல்லாமே புலிகளும் பிரேமதாசாவின் இனவாத அரசுக்கு இன்றும் இரகசியஉறவு இருப்பதைத்தான் காட்டுகிறது.

இன்று சகலமுனைகளிலும் ஸ்ரீ லங்கா அரசை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் எதிர்த்து நிற்பதையும் எரியும் எமது மக்களது பிரச்சனைக்கான ஒரு நிரந்தரத் தீர்வை முன்வைக்குமாறு அரசினை நாம் நிர்ப்பந்திப்பதையும், எதிர்கட்சிகளுடன் எம்மை இணைத்துக்கொண்டு அரசுக்கெதிரான புதிய போர்முனைகளை நாம் திறப்பதையும் பற்றி புலிகள் எழுதுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கவில்லை.

ஆனால் தாம் சொல்வதெல்லாம் சத்தியம். தாம் ஓதுவது எல்லாம் வேதம் என்றவகையில் புலிகள் தமது பிரச்சார இயந்திரங்கள் மூலம் விதைத்துவரும் பொய்விதைகளை நாம் அனுமதிக்கப்போவதில்லை. கைக்கூலிகளாகவும், கால்வருடிகளாகவும், சர்வதேச உளவு நிறுவனங்களின் சேவகர்களாகவும் தாங்கள் செயற்பட்டுக்கொண்டு மற்றவர்களைப்பற்றி புலிகள்விடும் சரடுகளை அம்பலப்படுத்துவது ஒரு முக்கியமான விடயம் என நாம் நினைக்கிறோம்.

அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே! வெறுமனே கலை, இலக்கியம் என்ற முகமூடிகளுக்குள் நாம் மறைந்து கொள்ளவோ அல்லது நடுநிலை போர்வைக்குள் ஒளிந்து கொள்ளவோ போவதில்லை. அல்லது எமது மண்ணில் புலிகளின் அடக்குமுறைக்குப் பயந்து அவர்களிடம் சரணாகதி அடைந்துவிட்ட அரசியல் இலக்கியவாதிகளைப் போன்றும், இங்கே வெளிநாடுகளிலும் புலிகளிடம் சரணாகதியடைந்து சங்கமமாகத்துடிக்கும் இலக்கிய வித்தகர்கள் போன்று நாம் இருக்கவிரும்பவில்லை.

நாம் ஒரு அரசியல் இயக்கம். எமது மக்களின் பிரச்சனையை தீர்க்கும் பொறுப்பை எமது தோள்களில் எடுத்துக்கொண்டவர்கள் எம்மால் முடிந்தவரை எமது கடமையை முன்னெடுப்போம். போராட்டத்தின் எதிரிகளை இறுதிவரை எதிர்த்து நிற்போம். எமது பிழைகளை நாம் உங்கள்முன்னே நியாயப்படுத்தவில்லை. ஆனால் விஷமப் பிரச்சாரங்களின் மூலம் எதிரிகள் மேலும் மேலும் ஏமாற்றுவதற்கு அனுமதிக்காதீர்கள்.

## பதவிப் போட்டிக்காக....

களம் அனுப்பி தியாகிகள்பட்டம் சூட்டுவதின் மூலம் சாதனை படைத்துவந்த புலித்தலைமையில் மீண்டும் ஓர் பதவிப்போட்டி எழுந்துள்ளது. பதவிப்போட்டி உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதால் மாத்தையாவைப் பிரபாகரன் ஆறுமாத இல்லறவாழ்வு நடத்துமாறு பணித்தாகவும் இவ் ஆறுமாதகாலகட்டத்தில் எந்தவித இராணுவ நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாதெனவும் பணித்துள்ளார் எனவும் மாத்தையாவின் பிரதித்தலைவர் பதவிக்கு பேபி சுப்பிரமணியம் என்பவரைப் பிரபாகரன் நியமித்துள்ளார்.

## புலிகளே தடை...

(ஏழாம் பக்கத் தொடர்ச்சி.......)

தால் பிரபாகரன் சட்டத்துக்கு முன்னால் கொண்டுவரப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். இந்தியாவில் புலிகளின் பிரபல்யத்துக்கு ராம் பெரும்பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

www.padippakam.com



# பிரதேச செயலகங்கள் அவசியமா?

கௌரவ குழுக்களின் பிரதித்தவிசாளர் அவர்களே, கௌரவ அமைச்சர் ஏ. சீ. எஸ். ஹமீட் அவர்களைத் தொடர்ந்து சிலகருத்துக்கள் கூறுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

முக்கியமான ஒரு விடயத்தை கௌரவஅமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவரவேண்டும் 238 பிரதேச செயலகங்களை அமைப்பதென்பது மிகவும் முற்போக்கான, புரட்சிகரமான, அடித்தள மக்களுக்கு நிர்வாகத்தைக் கொண்டுசெல்லக்கூடிய ஓர் ஏற்பாடு என கௌரவ அமைச்சர் அவர்கள் மிகவும் புகழ்ந்துரைத்தார். அடிமட்டத்துக்கு நிர்வாகம் கொண்டுசெல்லப்பட வேண்டும் என்பதில் எமக்கிடையில் எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் இந்த நாட்டில் முக்கியமாக, இனப்பிரச்சனைக்கான தீர்வுபற்றி நாம் ஆலோசித்துக் கொண்டிருக்கும் பொழுது- அதற்கான ஒரு பாராளுமன்றத் தெரிகுழு சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றபொழுது - இருக்கின்ற ஓர் அமைப்பை முற்று முழுதாக மாற்றி, இன்னொரமைப்பைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்கின்றோம். ஆரம்பத்திலே மாவட்ட அளவில் இருந்த விடையங்கள் இன்று மாற்றப்பட்டு, 238 பிரதேச செயலகங்களுக்கு அவை கொண்டு வரப்படுகின்றன.

கௌரவ குழுக்களின் பிரதித்தவிசாளர் அவர்களே, அரசியலமைப்புக்களுக்கான 13வது திருத்தத்தின் பிரகாரம் பல்வேறுபட்ட விடயங்கள் மாகாணசபைகளுக்கும், வேறுபல விடயங்கள் மத்திய அரசுக்கும், இன்னும் சில விடயங்கள் மத்திய, மாகாணஅரசுகள் சேர்ந்து செய்வதற்குமாக ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால், இன்று இந்த 238 பிரதேச செயலகங்களை உருவாக்குவதன் மூலம், இவை தனியாக மத்திய அரசுக்குச் சொந்தமான விடயங்களைக் கவனிக்கப் போகின்றனவா, இல்லையேல் மாகாண அரசுக்குச் சொந்தமான விடயங்களைக் கவனிக்கப் போகின்றனவா என்பதே முதலாவது கேள்வி.

இரண்டாவதாக கடந்தகாலத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் மத்திய அரசின் விடயங்களைக் கவனிப்பார் எனவும், மாவட்டங்களுக்கு மாவட்ட ஆணையாளர்களை நாம் உருவாக்கப் போகின்றோமோ, இல்லையேல் இவர்களே மாகாண, அரசுகளின் இருவிடயங்களையும் கவனிக்கப்போகின்றார்களா? என்பதையும் நாம் அறியவிரும்புகின்றேன். அது மாத்திரமல்ல : இனப்பிரச்சனைக்கான தீர்வுக்கு அதிகாரப் பங்கீடு - அதிகாரப் பகிர்வு - என்று நாம் கூறிக்கொள்ளும் அதே சமயம், இப்படியான மாற்றங்களை மிக அவசரப்பட்டுச் செய்வதானது, மக்கள்மத்தியில் பல்வேறு பட்ட கேள்விகளை எழுப்புகின்றது. அதிகாரப்பகிர்வுக்கு உண்மையில் இந்த அரசு ஒத்துளைக்கின்றதா, இல்லையேல் ஒரு பொய்யான- புரட்டான- கதையாக இது இருக்கின்றதா? என்ற சந்தேகங்கள் எழுகின்றன. இதை நான் இங்கு ஏன்குறிப்பிடுகிறேன் என்றால், இதற்கு முதல் மாகாணசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட பலவிடயங்கள், கொள்கைத் திட்டமிடல் என்ற அடிப்படையில் மத்திய அரசினால் திரும்ப எடுக்கப்பட்டன. உதாரணத்துக்கு Transport, Agrarian Services, Industry போன்ற சிலவிடயங்களை என்னால் குறிப்பிடமுடியும். கொள்கை, திட்டமிடல் என்ற அடிப்படையில் இவை மீளப்பெறப்பட்டன. இன்று, இந்த 238 பிரதேசசெயலகங்களைக் கொண்டுவருவதன் மூலம் நாங்கள் அதேமாதிரியான ஓர் எற்பாட்டைச் செய்கிறோமா?

அடிமட்டத்திலுள்ள மக்கள் மத்திக்கு- கிராம மட்டத்திற்கு- நிர்வாகத்தைக் கொண்டு செல்வதற்கு நாம் எந்தவிதமான தடையாகவோ இடைஞ்சலாகவோ இல்லை. ஆனால், நாங்கள் கேட்பது, இந்தத் தெரிகுழு மூலம் இந்தப் பிரச்சனைக்கான ஒரு தீர்வைக் கண்டபின்னர் இதைநாங்கள் செய்ய முடியாதா? என்பது தான்! இவ்வளவு அவசரமாக இவற்றைச் செய்வதற்கு ஏதும் உள்நோக்கம் இருக்கின்றதா, இல்லையா என்பதை இந்த நாட்டு மக்கள் அறிய வேண்டும். இல்லையேல், இந்த அதிகாரப் பங்கீடு தொடர்பாக தெரிகுழுவில் நாங்கள் பேசும்பொழுது, நிச்சயமாக இதுஒரு பிரச்சனைக்குரிய விடயமாகவருவது மாத்திரமல்ல, 'ஏற்கனவே இப்படியான ஒரு முறை இருக்கின்றது தானே! அதனைநாம் எப்படி மாற்றுவது' என்று பல்வேறுபட்ட கேள்விகள் அங்கே எழுவதற்கும் வாய்ப்புகள் உண்டு ஆகவே , கௌரவ அமைச்சர் அவர்கள் இதனைத் தமது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என நான் விரும்புகின்றேன்.



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும், யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய தோழர்.க.பிரேமச்சந்திரன் அவர்கள், பிரதேச செயலகங்கள் தொடர்பாக அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரையிலிருந்து....

அதேசமயம் இன்னொரு விடயத்தையும் நான் கௌரவ அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் ஏற்கனவே ஒரு தமிழ் உதவி அரசாங்கஅதிபர் பிரிவுஉண்டு. அதற்கென ஓர் உதவி அரசாங்கஅதிபரும் அங்கே இருக்கின்றார் ஆனால், அவ்வலுவலகம் முழுமையாக்கப் படவில்லை. இது சம்பந்தமாக அம்பாறை மாவட்ட தமிழ்மக்கள், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் உங்களைச் சந்தித்து பேசினார்கள். 'அவை நடைமுறைப் படுத்தப்படும்' என்று நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். இறுதியாக நான் கௌரவ அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் சம்மாந்துறை தமிழ் பிரிவுக்கு ஓர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வேண்டும் என்று கேட்டதற்கு 'கொள்கை ரீதியாகப் புதிய அரசாங்கஅதிபர் பிரிவுகளை ஏற்படுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது' என்று கூறப்பட்டது. இப்படியான பல பிரச்சனைகள் தீர்க்கப் படாமலேயே, பிராந்திய செயலகங்களை உருவாக்க வேண்டும் என்ற நிலைமைக்குச் சென்றுள்ளீர்கள். ஏற்கனவே தமக்குப் புதிய அரசாங்க அதிபர் பிரிவுகள் வேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொண்டிருக்கின்ற அதேசமயம், அவற்றை எந்த விதத்திலும் கவனத்திற்கு எடுக்காமல், பிரதேச செயலகங்களை உருவாக்குவதன் மூலம் நிர்வாகத்தை மக்கள் மட்டத்துக்குக் கொண்டுசெல்வதாக நீங்கள் குறிப்பிடுகின்ற விடயம் எவ்வளவு தூரத்துக்குச் சாத்தியமானதாக மக்களைச் சென்றடையக்கூடியதாக இருக்கமுடியும் என்பதைத் தயவு செய்து அமைச்சர் அவர்கள் கவனத்திலெடுத்துக் கொண்டு, அதைப் பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்

முக்கியமாக கௌரவ அஷ்ரஃப் அவர்கள் கூறியது போன்று கிழக்கு மாகாணத்தில் பல்வேறுபட்ட இடங்களில் புதிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அந்தத் தேவை வெறுமனே உருவாகவில்லை. நாட்டில் இருக்கக்கூடிய நடைமுறைப் பிரச்சனைகளைக் கவனத்தில் கொண்டு, மக்கள் தமது அன்றாட அலுவல்களைக் கவனிப்பதற்காக அந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஆரம்பிக்கப் படவேண்டியுள்ளன. ஆகவே, கௌரவ அமைச்சர் அவர்கள் இந்த இரு விடயங்களையும் கவனத்தில் எடுக்கவேண்டும் என்று நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்ததாக அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குகின்ற விடயத்தை இந்தப் பாராளுமன்றத்திலிருந்தே ஆரம்பிக்கவேண்டுமென்றே நான் கருதுகின்றேன். நான் இந்தச் சபையில் ஓர் அங்கத்தவராக இருக்கின்றேன் அதுபோல் Parliamentary Business Committee யிலும் ஓர் அங்கத்தவராக இருக்கின்றேன். அந்தக் குழுவிலே இருக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சிங்களத்திலே பேசுகின்ற வேளை அங்கே Translation கிடையாது. இன்றும் Public Administration Provincial Councils And Home Affairs ஆலோசனைக் குழுவிலும் அங்கத்தவராக இருக்கின்றேன். அங்கும் யாராவது சிங்களத்தில் பேசுகின்றவேளை அதற்கு Translation கிடையாது. அது மாத்திரமல்ல: இங்கே நடைபெறுகின்ற எந்தவொரு Consultative Committee கூட்டத்திலும் சிங்களம் தெரியாத பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ, தமிழ் தெரியாத சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ Translation என்பது கிடையவே கிடையாது. அவர்கள் பேசாமல் பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு எழுந்து செல்லவேண்டிய சூழ்நிலைதான் உள்ளது . இதைநான் சம்பந்தப்பட்ட பல்வேறு அமைச்சர்களினதும் கௌரவ சபாநாயகர் அவர்களினதும் கவனத்திற்கு கொண்டு வந்தேன். ஆனால் இதுவரை அந்தத்தேவை பூர்த்தி செய்யப்படவில்லை.

அது மாத்திரமல்ல: பல்வேறுபட்ட திணைக்களங்களில் அல்லது அலுவலகங்களில் என்றால் அங்கே தமிழ் ஊழியர்கள் போதாதென்று நாம் நம்பமுடியும்:யோசிக்கமுடியும், ஆனால் இந்தப் பாராளுமன்றத்திலிருந்து அல்லது கௌரவ அமைச்சர்களிடமிருந்து வரும் கடிதங்கள் கூட தனிச்சிங்களத்தில் அனுப்பப் படுகின்றன. Provincial Council Ministry இல் இருந்து கடந்த மாதம் ஆறாம் திகதி என்று நினைக்கின்றேன் - தனிச்சிங்களத்தில் எனக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதற்கு எந்த விதமான Translation உம் கொடுக்கப் படவில்லை. ஆகவே முதலில் எங்கே இருந்து இதை ஆரம்பிக்க வேண்டும் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். பாராளுமன்றத்திலிருந்து, அமைச்சர்களின் தலைமைச்செயலகத்திலிருந்து முதலில் இவ்விடயங்களை நாங்கள் ஆரம்பிக்க வேண்டும்.

அது மாத்திரமல்ல: 'எந்தவொரு திணைக்களத்திலும் தமிழ்மொழி அமுலாக்கல் இல்லை.' என்று நான் திரும்பத் திரும்பச் சொன்னாலும் ' அதற்குத் தேவையான உத்தியோகஸ்தர்கள் இல்லை. Translation செய்வதற்கான உத்தியோகஸ்தர்கள் இல்லை: தமிழ் Typist இல்லை' என்று நீங்கள் மீண்டும் மீண்டும் Record மாதிரிச் சொல்லிக் கொண்டே வருகிறீர்கள். அந்த ஊழியர்களுக்கான 'Cadre' ஐ அதிகரிக்கும்படி எந்தவொரு திணைக்களமாவது கேட்டுள்ளதா என நான் கேட்கவிரும்புகின்றேன். இந்தப் பாராளுமன்றத்துக்குக் கூடுதலான Cadre தேவையென்று கருதினால், Translators தேவையென்று கருதினால் அதைக் கூட்டுவதற்கு முயற்சி செய்யப்பட்டிருக்கின்றதா? எமக்கு இன்று தமிழ் தெரிந்த Typists தேவை Translators தேவை என்னும்போது, இந்த நாட்டில் இருக்கக்கூடிய பல்வேறு திணைக்களங்களிலும், பல்வேறு அலுவலகங்களிலும் அவ்வுத்தியோகத்தர்களுக்கான Cadreகளை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றதா? இந்த அமைச்சு அதற்கான முயற்சிகளை எடுத்திருக்கின்றதா? இந்த உத்தியோகத்தர்களுக்கான Cadre ஐ அதிகரிப்பதன் மூலம் இந்தப் பிரச்சனைக்கு ஓரளவு தீர்வுகாணலாம் என நான் நம்புகின்றேன்.

1990ம் ஆண்டு நவம்பர் மாதம் 13ம் திகதி தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கான பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது. அப்பரீட்சையில் சித்தியெய்திய யாருமே இதுவரை வேலைக்கு அமர்த்தப்படவில்லை. கடந்த 1990 ஆம் ஆண்டில் இப்பரீட்சை நடந்திருந்தும் சித்திபெற்றவர்கள் யாருமே இதுவரையில் வேலைக்கு அழைக்கப்படவில்லை என்பதே உண்மை. அது மாத்திரமல்ல தமிழ்மக்கள் சிங்கள மொழிமூலமோ அல்லது சிங்கள மக்கள் தமிழ்மொழிமூலமோ தங்கள் கருமங்களை ஆற்றுவதற்கு முன்பு உத்தியோகஸ்தர்களுக்கான ஊக்குவிப்புத்திட்டம் ஒன்று இருந்தது. நான் நினைக்கிறேன், கௌரவ தேவநாயகம் அவர்கள் அமைச்சராக இருந்த காலத்தில் மும்மொழிகளிலும் அரசஅலுவல்களைக் கவனிக்ககூடிய தராதரமுள்ளவர்களுக்கு 1000 ரூபா அலவன்ஸ் ஆகவும் இருமொழிகளில் கருமங்களை ஆற்றக் கூடிய உத்தியோகத்தர்களுக்கு 500 ரூபா அலவன்ஸ் ஆகவும் ஊக்குவிப்புப் பணம் கொடுக்கும் ஒருதிட்டம் இருந்தது.

அத்தகைய திட்டங்கள் எதுவும் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பதை அமைச்சரவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன். அதற்கான எந்தவொரு முயற்சியாவது மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

இன்று சில அலுவலகங்களை நாங்கள் பார்க்கின்ற வேளையில் அங்கே தமிழ் தட்டெழுத்தாளர் ஒருவர் கடமையாற்றுவார். அவருக்கு சிலசமயங்களில் அங்கே வேலை கிடையாது. அதே நேரத்தில் அந்த அலுவலகத்திலே மொழிபெயர்ப்பு வேலைகளைக் கவனிக்க ஆளில்லாமலிருக்கும். எனவே மொழிபெயர்ப்பு வேலைகளைக் கவனிக்க ஆளொருவர் இல்

(எட்டாம் பக்கம் பார்க்க...........)

படிப்பகம்

www.padippakam.com



# புலிகளும் முஸ்லீம்மக்களும்!

தமிழ்பேசும் மக்களின் அங்கமான முஸ்லீம் மக்கள் மீதான புலிகளின் இனசுத்தம் செய்யும் நடவடிக்கையான வடக்கு மாகாணத்தில் இருந்து வெளியேற்றல் நடவடிக்கை, கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் புலிகள் மேற்கொள்ளும் முஸ்லீம் மக்கள் மீதான படுகொலைகள் போன்றவைகளின் விளைவாக பழிக்கப்பழி என்ற நிலையும் இரு சமூகங்களுக்கிடையிலும் முரண்பாடுகள் மேலும் கூர்மை அடைந்து வருவதுடன் இவ்வகையான போக்குகள் பேரினவாத அரசிற்கு அனைத்து வழிகளிலும் சாதகமான நிலையையே தோற்றுவித்து இருக்கின்றன.

1986களின் பிற்பகுதியில் , முஸ்லீம் மக்களை மத அடிப்படையில் மட்டும் கணித்து "இஸ்லாமியத் தமிழர்கள்" என்று எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்த புலிகள், முஸ்லீம் மக்களின் தனித்துவ அடையாளங்களைப் புரிந்துகொள்ள முடியாத வரலாற்றுக் குருடர்களாக மாறி மூன்று நூற்றாண்டுக்கு மேலாக தமிழர்களுடன் இணைந்து வாழ்ந்த மக்களை மூப்பது நிமிடத்துக்குள்ளே வடமாகாணத்தை விட்டே அடித்துத் துரத்தினர்.

ஆனால் இலண்டனில் இருந்து வெளிவரும் புலிகளின் "களத்தில்" (இது தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகையாம்) பத்திரிகையில் முஸ்லீம்மக்கள் தொடர்பான தமது நிலைப்பாட்டை 7.08.1992 இல் வெளியான "தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழீழ முஸ்லீம்களும்" என்னும்கட்டுரையில் முஸ்லீம் மக்கள் மீதான புலிகளின் பாசிச அணுகுமுறையையும், கொடூரங்களையும் படாதபாடுபட்டு மூடிமறைத்து முஸ்லீம் சமூகத்தில் உள்ளவர்களை வெறியர்களாகவும், காடையர்களாகவும், பாலியல் வன்முறையாளர்களாகவும் சித்தரித்து தாம் செய்த இனச்சுத்தத்தை மூடிமறைத்துள்ளனர்.

தமிழ் பேசும் மக்களின் தேசியப் பிரச்சனைக்கு ஒட்டுமொத்தமான தீர்வைக் காண்பதற்கு (அது தனிஅரசை அமைப்பதாக இருந்தாலும் சரி, ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை காண்பதாக இருந்தாலும் சரி) தமிழ் பேசும் மக்களின் அங்கமாகத் திகழ்கின்ற, அதேவேளை தமது மத, கலை, கலாச்சாரத் தனித்துவங்களை பேணிப் பாதுகாக்க விரும்புகின்ற முஸ்லீம் மக்களின் ஒத்துழைப்பும், பிரதிநிதித்துவமும் தேவைப்படுகின்றது என்பதே நிகழ்கால உண்மையாகவும் யதார்த்தமாகவும் உள்ளது.

ஆனால் தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை என்று தனக்குத் தானே மகுடம் சூட்டிக் கொள்ளும் "களத்தில்" பத்திரிகையானது புலிகளின் உத்தியோக பூர்வ வெளியீடானதால் உண்மைக்கும் அதற்கும் எப்படிச் சம்பந்தம் இருக்க முடியும் ? பொய்யிலே பிறந்து, பொய்யிலே வளர்ந்த வரலாற்றைக் கொண்டவர்களல்லவா அவர்கள். அதனால்தான் அவர்களின் பத்திரிகையிலும் பொய்யும் புரளியும் குறைவில்லாமல் இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்திலோ அல்லது ஏனைய தமிழ் பிரதேசங்களிலோ தமிழ், முஸ்லீம் மக்கள் மத்தியில் தனிநபர்களின் சண்டைகளும் அல்லது கிராமங்களுக்கிடையில் பல்வேறு காரணங்களால் எழும் முரண்பாடுகளும் நீண்ட காலத்துக்கு நீடிப்பதில்லை. காரணம் அந்த அளவுக்கு தமிழ், முஸ்லீம் மக்களுக்கிடையில் நல்லுறவே நீடித்தது. இதற்கு பல சான்றுகளும் இருக்கின்றன.

சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளின் காலகட்டங்களிலும், குறிப்பாக 83யூலையின் இனக்கலவர காலகட்டத்திலும் பலஆயிரக் கணக்கான தமிழர்களின் உயிர்களை பாதுகாப்பதற்காக போராடியதுடன், அவர்களும் பேரினவாத ஒடுக்குமுறைக்கு பல சந்தர்ப்பங்களில் உட்பட்டிருக்கின்றனர். குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லீம் மக்கள் வாழும் பகுதிகள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் நிலங்கள் பறிக்கப்பட்டன 30.01.1952இல் காலிநகரத்தினில் முஸ்லீம் மக்கள் பரவலாக பாதுகாப்புப் படைகளாலும் காடையர்களாலும் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டது. அதே போல் 2.02.1976 இல் புத்தளம் ஜிம்மா பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஏழு முஸ்லீம் மக்கள் பாதுகாப்புப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் கலவரமாகவும் உருவெடுத்தது. இப்படியாக பலசந்தர்ப்பங்களில் முஸ்லீம் மக்களுக்கு எதிராகவும் பேரினவாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வகையான சம்பவங்களை எதிர்த்து பேரினவாத அரசுக்கெதிராக முஸ்லீம் மக்களும் போராடினார்கள். ஆனால் புலிகளோ அக்கட்டுரையில் முஸ்லீம் மக்கள் பேரினவாத அரசுக் கெதிராக ஆயுதமேந்திப் போராடிய வரலாறே இல்லை என்று முழுப்பூசனிக்காயை சோற்றுக்குள் மறைக்கின்றனர். அந்த அளவுக்கு வரலாறே தெரியாமல் புலிகள் போராட்டம் நடத்துவதுதான் வெட்கக் கேடான விடயம். புலிகளின் அகராதியில் ஆயுதங்கள் என்றால் இயந்திரத் துப்பாக்கிகள் மட்டும்தான் என்ற கணிப்போ?

அடுத்தாக புலிகள் அக்கட்டுரையில் கூறியிருப்பது என்னவென்றால் "1990 ம் ஆண்டு யூன் மாதத்திற்குமுன்பு தமிழ், முஸ்லீம் மக்களுக்கிடையில் மோதல்கள் வரும்போதெல்லாம் முஸ்லீம்மக்களின் பக்கமே நின்று பிரச்சனைகளைத் தீர்த்தோம்". என்றும் இன்னோரிடத்தில் கூறுகையில் "பலசந்தர்ப்பங்களில் தென் தமிழீழத்தில் எமது போராளிகள் பலவந்தமாக பிடிக்கப்பட்டு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அல்லது காட்டிக் கொடுக்கப்பட்டனர்". என்றும் குறிப்பிடுகின்றனர். இங்கேதான் இரண்டு கூற்றுக்குமிடையில் பலமான முரண்பாடு இருப்பதைக் காணலாம். முதலில் புலிகள் முஸ்லீம் மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தால் முஸ்லீம் மக்கள் புலிகளைக் காட்டிக் கொடுக்கும் அல்லது பிடித்துக்கொடுக்கும் கைங்காரியத்தில் ஏன்ஈடுபடவேண்டும்? ஆகவே புலிகள்கூற்றில் ‹ உண்மையில்லை. என்பதை எமக்கு புலப்படுத்துகின்றது.

ஏனெனில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தின் தேடுதல் வேட்டைக் காலகட்டங்களிலும், புலிகள் ஏனைய சகோதர போராளி இயக்கங்களை தடைசெய்து அழிப்பதற்காக எடுத்த இராணுவ நடவடிக்கை காலகட்டத்திலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லீம்மக்கள் பலசந்தர்ப்பங்களில் போர்ராளிகளைப் பாதுகாத்தனர். 1986ம் ஆண்டு மார்கழி 13ம் திகதி ஈ.பி. ஆர். எல். எவ்.ஐ தடைசெய்து தாக்குதலை மேற்கொண்டபோது கிழக்கு மாகாணத்தில் ஈ.பி. ஆர். எல்.எவ். இன் பலமுக்கிய தோழர்கள் முஸ்லீம் கிராமங்களிலேயே பாதுகாக்கப்பட்டனர். இச்சம்பவ காலகட்டத்தில் தான் ஈ.பி. ஆர். எல்.எவ். தோழர். இரத்தினம், லண்டன் தமிழோசைக்கு முஸ்லீம் கிராமம் ஒன்றிலேயே நின்று பேட்டிகொடுத்தார் என்பதே போதுமானதாகும்.

ஆனால் புலிகளோ ஈ. பி. ஆர். எல். எவ். ஐ தடைசெய்யும் போது கூறியகாரணங்களில் ஒன்றான "கிழக்கு மாகாணத்தில் ஈ.பி. இன் மார்க்ஸிசம் முஸ்லீம் பள்ளிவாசல்வரைக்கும் சென்றது என்றார்கள், இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டபின்பு ஈ. பி. ஆர். எல். எவ். தோழர்கள் கிழக்கு மாகாணத்தில் தீவிர அரசியல் வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது புலிகள் தமது இலாபங்களுக்காக கிழக்கு மாகாணமக்கள் மத்தியில் "ஈ.பி. முஸ்லீம்களின் நலன்களை மட்டுமே கருத்தில் எடுக்கின்றது". என்று புலிகளின் சுவரொட்டிகள் கோஷமிட்டன. பின்பு இந்திய இராணுவத்துடன் தேன்நிலவு முடிந்து மோதல்கள் தொடங்கியபின்பு "முஸ்லீம் விரோதப் போக்குடைய இந்திய இராணுவம் தன்னுடன் இணைந்து செயற்படும் துரோகக் குழுக்களை முஸ்லீம் விரோதப்போக்குடன் வளர்க்கின்றது". என்றும் முழக்கமிட்டனர். அவ்வகையான உணர்வை முஸ்லீம் மக்கள் மத்தியில் வளர்ப்பதற்காக புலிகள் வலிந்து முஸ்லீம் கிராமங்களில் குறிப்பாக மக்கள் செறிந்துவாழும் இடங்களில் தமது வளமையான, தாக்குதல் தப்பித்தல் வேலையைக் காட்டி இந்திய இராணுவத்துக்கும் முஸ்லீம் மக்களுக்குமிடையில் விரிசலை ஏற்படுத்த பலசந்தர்ப்பங்களில் முயற்சிகளை எடுத்தார்கள். இவ்வகையான சம்பவங்களுக்கு பேரினவாத அரசின் உதவியையும் நாடினர். இலங்கை இராணுவ முகாம்களிலும் பேரினவாத அரசுக்கு மிகவும் நெருங்கிய முஸ்லீம் பிரமுகர்களின் வீடுகளுமே புலிகளுக்கு அன்று சரணலயமாக விளங்கின.

இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் தொடங்கியயுத்தத்தின் பின்பு முன்னாள் யாழ்மாவட்டத் தளபதியும் தலைவர் பிரபாகரனுக்கே தண்ணிகாட்டத் துடித்தவரும் இன்று ஐரோப்பாவின் ஓர் நிலையில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பவருமான திருவாளர் கிட்டு அவர்களுக்கும் "முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி" க்குமிடையில் ஓர் பேரம் பேசல் நாடகம் தமிழ்நாட்டில் நடந்தேறியது. ஆனால் இருபகுதியினரும் என்ன பேசினார்கள் என்பதை யாருக்குமே தெரியாமல் இன்றுவரை மர்மமாக இருக்கின்றது. இப்படியாக புலிகள் முஸ்லீம் மக்கள் தொடர்பாக எந்தவிதமான திட்டவட்டமான, நிலையான முடிவுகளையும் எடுக்காது காலத்துக்கு காலம் சந்தர்ப்பவாத அரசியல், இராணுவநடவடிக்கைகளையே மேற்கொண்டு வருகின்றனர்.

பேரினவாத அரசுடன் அன்பான தேன்நிலவு முறிவடைந்து யுத்தம் தொடங்கக் காரணமாக இருந்ததே புலிகளுக்கு உடைகள் தைத்துக் கொடுத்துவந்த முஸ்லீம்நபர் ஒருவரே. இந்தத் தையல் தொழிலாளி சிங்கள பொலிசாரின் மனைவியுடன் தகாதமுறையில் வைத்திருந்த உறவே இன்று புலிகள் பெருமையுடன் கூறிக்கொள்ளும் "2ம் கட்ட தமிழீழப் போர்" தொடங்குவதற்குஅமைந்த அரசியல் காரணியாகும். ஆனால் இன்று புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் ஒரு முஸ்லீம் குடிமகன்கூட இல்லை. முஸ்லீம் மக்களின் மத கலாச்சார வழிபாட்டுத் ஸ்தலங்கள் வெறிச்சோடிக் கிடக்கின்றன. இதுதான் இன்று புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற பிரதேசங்களில் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவந்த முஸ்லீம்மக்களுக்கும் அவர்களது மத கலாச்சார தனித்துவங்களுக்கும் புலிகள் வழங்கியிருக்கின்ற பாதுகாப்பு இதற்குள் யாழ் மாவட்டத்தில் புலிகளின் முன்னெடுப்பில் "அனைத்து மத அணிநடை". நல்ல வேடிக்கையாக இருக்கின்றது.

இங்கு இருக்கக்கூடிய பிரதான பிரச்சனைகள் என்னவென்றால் "முஸ்லீம்களின் நிலங்களைப் பறித்து அவர்களின் கலாச்சாரச் சின்னங்களைத் துடைத்தெறிந்து தனித்துவத்தை சிதைக்க முயன்றது தமிழர்களா? அல்லது தமிழ் மக்களின் தேசிய இயக்கமான புலிகள் இயக்கம் அரசியல் ரீதியாக முஸ்லீம் மக்களுக்கு தவறிழைத்து விட்டதா? அல்லது முஸ்லீம் எதிர்ப்புணர்வைக் காட்டி முஸ்லீம்களை இம்சித்ததா? எதுவுமே இல்லை" என்று கூறும் புலிகள் சற்று சிந்திப்பது நல்லது.

யாழ்/மாவட்டத்திலும் மற்றும் மன்னார் போன்ற பகுதிகளிலும் இருந்து முஸ்லீம் மக்கள் அடித்து விரட்டப்படவில்லையா? அவர்களது நிலங்கள் பறிக்கப்படவில்லையா? அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டு ஏலத்தில் விற்று புலிகள் பணம் சம்பாதிக்கவில்லையா? முஸ்லீம் மக்களின் கலாச்சார வழிபாட்டுச் சின்னங்கள் இன்று சரியான முறையில் பராமரிக்கப்படுகின்றனவா? முஸ்லீம் சிறுமிகளின் காதுகளில் உள்ள குச்சித் தோடுகளைக்கூட பெண்புலிகள் அறுத்து எடுத்து அடித்துத் துரத்திய கோரச்சம்பவங்கள்தான் மறந்து போயினவா? இவைகளை யார் செய்தார்கள்?

ஆனால் இவ்வளவு கஸ்டங்களையும் துன்பங்களையும் கொடுமைகளையும் சந்தித்த யாழ்/ மாவட்ட முஸ்லீம்மக்கள் கொழும்பின் தெருவோரங்களிலும்; அகதிமுகாம்களிலும், அதே போல் மன்னார் மாவட்ட முஸ்லீம்கள் புத்தளம் மாவட்டங்களிலும் மிகவும் ஏழ்மையான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள்.

83ம் ஆண்டு கொழும்பிலும் ஏனைய சிங்களப் பிரதேசங்களிலும் வாழ்ந்த முஸ்லீம் மக்கள் தமது உயிருக்கு ஆபத்து வரும் என்ற நிலையிலும் கூட பலநூற்றுக்கணக்கான தமிழர்களின் உயிர்களை பாதுகாத்தார்கள். ஆனால் யாழ் மாவட்டத்தில் வாழுகின்ற தமிழர்கள் ஒரு முஸ்லீம் குடிமகனையாவது பாதுகாத்தார்களா? இல்லை ஏன் முடியாமல் போனது ? அவ்வளவுக்கு சிங்கள பேரினவாதிகளின் ஒடுக்குமுறைகளையும் மிஞ்சி புலிகளின் நிர்வாகத்தில் ஜனநாயகப் பண்புகள் சிதைக்கப்பட்டு பாசிசம் கோலோச்சுகின்றது.

அடுத்ததாக முஸ்லீம் வெறியர்களினால் பல தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று புலிகள் அக்கட்டுரையில் கூறியுள்ளார்கள். இவ்வகையான இழப்புக்களுக்கு புலிகளின் அணுகுமுறைகளே முக்கிய காரணங்களாக அமைகின்றமையால் புலிகளே பெருமளவில் பொறுப்பாளிகளாவர்.

காரணம் என்னவெனில் முஸ்லீம் மக்களின் பிரதிநிதிகளாக செயற்பட்ட பலமுஸ்லீம் பிரமுகர்களை புலிகள் படுகொலை செய்தார்கள். (குறிப்பாக பதியுதீன் முகமது, லெப்பை போன்றவர்கள்) புலிகள் ஏனைய இயக்கங்களை தடைசெய்து செயற்பாடுகளை முடக்கியது போல முஸ்லீம் மக்கள் மத்தியில் இருந்து செயற்பட்ட முஸ்லீம் காங்கிரஸ் போன்ற அமைப்புக்களின் உறுப்பினர்களை சுதந்திரமாக செயற்பட முடியாமல் நடந்து கொண்டனர். இவைகளின் மூலம் புலிகள் தம்மைக் கட்டுப்படுத்துவதாகவும், தமது தனித்துவத்தை அங்கீகரிக்கவில்லை என்றும் முஸ்லீம் மக்கள் ஆத்திரம் அடைந்தனர்.

இவைகளின் காரணத்துக்காகவே முஸ்லீம் காங்கிரஸ் தமது உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்காக மெய்பாதுகாவலர்களை நியமித்தது. அதற்காகவே ஆயுதங்களையும் பெற்றுக் கொண்டது.

இதே வேளை கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற முஸ்லீம் மக்களில் ஒருபகுதியினர் காலம் காலமாகவே தேசியக் கட்சிகளை ஆத

படிப்பகம்

ரிப்பவர்களாக இருந்து வந்தமையால் புலிகளின் போராட்ட அணுகுமுறைகளை அறவே வெறுத்தார்கள். இவ்வகையான பகுதியினர்களில் ஒரு சிலர் புலிகளைக் காட்டிக் கொடுத்திருக்கலாம் அல்லது பிடித்துக் கொடுத்திருக்கலாம்.

ஆனால் அதற்காக ஆத்திரம் அடைந்து முஸ்லீம் மக்கள் மீது படுகொலைகளை மேற்கொள்வது தான் தீர்வாகுமா? அல்லது அவர்களது மத வழிபாட்டுத் தலங்களை மனித இரத்தத்தினால் உறையச் செய்வதுதான் தீர்வாகுமா? தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் வாழும் முஸ்லீம் மக்களின் சொத்துக்களை சூறையாடித் துரத்தியடிப்பதுதான் தீர்வா?

முஸ்லீம் மக்களில் இருக்கின்ற ஒரு பிரிவினர் தமிழ் விரோதப் போக்கினைக் கொண்டிருப்பதற்கு எமது விடுதலை அமைப்புக்களே காரணமாக அமைந்திருக்கின்றன. அதிலும் குறிப்பாக புலிகளே முக்கிய காரணம் எனலாம். ஏனைய இயக்கங்களும் முஸ்லீம் மக்கள் மீது துன்புறுத்தல்க்ளில் ஈடுபட்டிருக்கின்றனர். அவ்வகையான சம்பவங்களுக்கு காரணமானவர்கள் பெரும்பாலும் அடிமட்ட உறுப்பினர்களாகவும், சமூகக் கட்டுமானங்களிலிருந்து விடுபடமுடியாதவர்களாகவும் இருப்பவர்களே காரணமாக இருந்தனர். ஆனால் புலிகளைப் பொறுத்த வரையில் அதன் தலைமையே முஸ்லீம் விரோதப் போக்கை கொண்டிருந்ததுடன் அவைகளை நடைமுறைப்படுத்தவும் தமது உறுப்பினர்களைப் பணித்தது என்பதுதான் துரதிஷ்டவசமான விடயமாகும்.

புலிகள் ஏனைய சகோதரப் போராளிகளை தடை செய்து இதுவரை ஆயிரக்கணக்கில் படுகொலை செய்தும், தீயிட்டுக் கொழுத்தியும் தன் சொந்த மக்களிலேயே தனக்கு எதிரானவர்களை துரோகிகள் என்று பட்டம் சூட்டி தண்டனை கொடுத்தும் ஆயிரக்கணக்கில் குளுக்காய் போன்ற சித்திரவதைக் கூடங்களில் வைத்திருக்கும் புலிகளின் நடவடிக்கையும், ஏனைய இயக்கங்களுக்கு தமது போராடும் உரிமை மறுக்கப்பட்டதனால் புலிகளுக்கும் புலிகளின் பாசிச விரும்பிகளுக்கும் எதிராக எடுத்த நடவடிக்கைகளாலும் முஸ்லீம்கள் வெறுப்படைந்தனர், அச்சமடைந்தனர். தன் சொந்த மக்களின் அனைத்து ஜனநாயக சுதந்திரங்களையும் பறித்த புலிகள் எமது தனித்துவத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்த மாட்டார்கள் என்று முஸ்லிம் மக்கள் தீர்மானித்தது நியாயமானதே.

ஆனால் புலிகள் முஸ்லீம் மக்கள் தொடர்பாக கொண்டிருந்த நிலைப்பாட்டைப் போல ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கொண்டிருக்கவில்லை. மாறாக கணிசமான அளவு உறுப்பினர்களை அணிதிரட்டுவதிலும், முஸ்லீம் மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்வதிலும் வெற்றிகண்டது.
தமிழ் நாட்டில் புலிகளால் கோழைத்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட செயலாளர் நாயகம் தோழர். பத்மநாபாவுடன் மரணித்த 12 தோழர்களுள் ஒருவரான தோழர். முகமட் தில்லார்,
போன்றவர்கள் முஸ்லீம் மக்கள் மத்தியில் இருந்து உருவாகி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் முக்கிய பொறுப்புக்களில் இருந்து வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தினார்கள்.

முஸ்லீம் மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் தொடர்பான நம்பிக்கைகளை வளர்ப்பதிலும், தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்துவதிலும் என்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுதியுடன் போராடியது.

மாகாண அரசுக் காலகட்டத்தில் முஸ்லீம் மக்களின் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொண்ட முஸ்லீம் காங்கிரசை அமைச்சில் இணைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அவ்வகையான முயற்சிகளை எமது மறைந்த செயலாளர் நாயகம் தோழர். பத்மநாபா மேற்கொண்டார். அவை பலனளிக்காது போனாலும் முஸ்லீம் காங்கிரஸ் மாகாண சபையில் எதிர்கட்சி அணியில் இருந்த போது மாகாண அரசின் திட்டங்களுக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் முஸ்லீம் காங்கிரசின் ஆதரவினைப் பெற்றுக் கொள்ளும் வகையிலும், புரிந்துணர்வுகளை வளர்ப்பதிலும் முதல் அமைச்சர் முதல் மாகாண சபை உறுப்பினர்கள் வரை நிதானத்துடன் செயற்பட்டனர். எந்தவிதமான பாகுபாடும் இல்லாது முஸ்லீம் மக்களின் பிரதேசங்களும் அபிவிருத்திக்கு உட்படுத்தப்பட்டன.

இன்றும் ஏனைய தமிழ் கட்சிகளுடன் இணைந்து தமிழ்பேசும் மக்களுக்கான தீர்வை ஏற்படுத்தும் நோக்கில், முஸ்லீம்கட்சிகளுடன் இணைந்து முஸ்லீம் மக்களின் பாதுகாப்பு, அமைப்பு முறை போன்ற விடயங்களை ஆராய்ந்து தீர்வை ஏற்படுத்தும் முயற்சியிலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

ஆகவே புலிகள் ஒட்டுமொத்தமாக துரோக குழுக்கள் முஸ்லீம் விரோதப் போக்குடன் செயற்பட்டதாகவும் தாம்தான் ஏதோ சாதித்து விட்டதாகவும் கூறும் புனைகதைகளுக்குள் ஈ.பி.ஆர்.எல். எவ். ஐ அடக்கிவிடமுடியாது.

எனவே இவைகளை எல்லாம் நாம் சுட்டிக் காட்டும் போது முஸ்லீம் மக்கள் மத்தியில் இருந்து செயற்படும் சில தீயசக்திகள் செய்யும் கொலைகளையோ அல்லது காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளையோ நியாயப் படுத்துவதாக அமைந்து விடாது. பேரினவாத சக்திகளின் சூழ்ச்சிக்கு புலிகள் பலியாகி தேன்நிலவு கொண்டாடியது போலவே இன்று முஸ்லீம் மக்கள் மத்தியிலிருந்து செயற்படும் சில தீய சக்திகளின் நடவடிக்கையுமாகும்.

இலங்கைத் தீவில் இன்று தொழிற்படும் பேரினவாதமானது வெறுமனே தமிழ்மக்களுக்கு மட்டுமே ஆபத்தானதாக இல்லாமல் முஸ்லீம் மக்களுக்கும் ஆபத்தானதே. இன்னும் சற்று விரிவாக ஆராய்வோமானால் அது ஒட்டு மொத்தமாக இலங்கைத் தீவின் அனைத்து தொழிலாள வர்க்கத்துக்கும் எதிரானதே.

ஆகவே இப்பேரினவாதிகளின் சூழ்ச்சிகளை உடைத் தெறிவதும், புலிகளின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ் மக்களாகிய நாம் போராடுவதன் மூலமாகவும் தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையில் மீண்டும் உறவை வலுப்படுத்தவும் இலங்கைத் தீவின் அமைதிக்கும், சமாதானத்துக்கும், ஜனநாயகச் சூழலுக்குமான நிரந்தரமான அரசியல் தீர்வை ஏற்படுத்த முடியும்.

மாறாக தமிழர்களாகிய நாம் முஸ்லீம் மக்கள் தொடர்பாக புலிகள் கொண்டிருக்கும் நிலைப்பாட்டை மௌனம் சாதித்து விட்டு விடுவோமானால் கடந்த காலத்தில் புலிகள் ஏனைய இயக்கங்கள் மேல் மேற் கொண்ட நடவடிக்கைகளினால் இன்று தொடரும் அனர்த்தங்களை விட பலமடங்கு இழப்புக்களையும், தமிழ்பெசும் மக்களின் சுயநிர்ணயப் போராட்டம் முன்னெடுக்கப்பட முடியாத அளவுக்கு பின்நோக்கிய நிலையினையே இட்டுச் செல்லும். ஆகவே அவ்அக் காலங்களில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சரியான நேரத்தில் எடுக்காது விட்டால் எம்மை அடுத்த சந்ததி மன்னிக்காது.

அத்துடன் தமிழ் நாட்டில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை கட்டாயத்தின் பேரில் அனுப்பப்படுகின்றார்கள், சுவிஸ்சும் இங்கிலாந்தும் அனுப்ப முயற்சிக்கின்றது என்று என்று முணுமுணுப்பதற்கு கூட நாம் தகுதியற்ற மனித சமூகமாகவே இருக்கும். ஐரோப்பிய மற்றும் அமெரிக்கக் கண்டங்களில் அதிகரித்து வரும் நிறவெறியும் இனவெறியும் எதிர்காலத்தில் அமையப்போகும் ஜெர்மனிய பாசிச அரசுக்கான இன்றைய அனர்த்தங்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் கறுப்பின அகதிகள் கூட்டத்திற்குள்ளும், கறுப்பின வெளிநாட்டவர் கூட்டத்திற்குள்ளும் அடங்குவதினால் அவ்வகையான ஒடுக்குமுறைகளுக்கெதிராக போராடுவதிலும் எந்தவித அர்த்தமும் இருக்காது. ஏனெனில் இன்று புலிகள் முஸ்லீம் மக்களை வெளியேற்றி இனச்சுத்தம் செய்தும், முஸ்லீம் மக்கள் மீதும் படுகொலைகள் செய்து வருவதற்கும் இன்று எமது மக்கள் வாழ்ந்து வரும் வெளிநாடுகளில் நிறவாத, இனவாத, பாசிச சக்திகள் வெளிநாட்டவர்களுக்கெதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கும் எந்தவிதமான வித்தியாசமும் கிடையாது. மத அல

ஆகவே தமிழ் பேசும் மக்களாகிய நாம் அடக்கு முறைகள் ஒடுக்கு முறைகள் எந்த வடிவில் வந்தாலும், அது எந்த சக்தியாக இருப்பினும் அதை எதிர்த்து போராடுவதின் மூலமே தமிழ் பேசும் மக்கள் உலக அரங்கில் இழந்துவிட்ட கௌரவத்தையும், அனுதாபத்தையும் பெறுவதுடன் எமது சுயநிர்ணய உரிமை உரிமைப் போராட்டத்தின் நியாயத்தையும் சர்வதேச அரங்கிற்கு கொண்டு செல்வதுடன் வெற்றியை நோக்கியும் முன்னேறமுடியும்.

ஆகவே தமிழ் பேசும் மக்களாகிய நாம் உறக்கங்களிலிருந்தும், மௌனத்திலிருந்தும் விடுபடுவோமானால் வரலாற்றைப்படைத்தவர்களாவோம். இல்லையேல் தன்னைத்தானே அழித்துக்கொண்ட தமிழினம் என்று வரலாற்றில் எழுதப்படும்? .......................

**நேசன்-லண்டன்**

## புலிகளே தடை

இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதில் புலிகளே பெரும்தடையாக உள்ளனர் என தமிழகமக்கள் நம்புவதாக பிரபல இந்தியப் பத்திரிகையாளரும் "புரொன்ட்லைன்" ஆசிரியருமான ராம், ஐலன்ட் பத்திரிகைக்கு பேட்டியளித்த போது தெரிவித்துள்ளார். ராஜீவ்காந்தி கொலையில் பிரபாகரன் சம்பந்தப்பட்டிருப்பதற்கு போதிய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப் படுவ

(நாலாம் பக்கம் பார்க்க..........)

## புலிகள் பிரேமதாசா உறவு தமிழினத்துக்கு தந்தது என்ன?

இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்கும் நடந்த நீண்டகாலப் பேச்சுவார்த்தை அரசும் புலிகளும் இணைந்து இந்தியப்படைகள் வடக்கு கிழக்கில் இருந்து வெளியேற வேண்டும் என்ற உடன்பாட்டுக்கு வந்ததுடன் புதியகட்டத்துக்குப் பிரவேசித்தது.

இதற்கு பிரதி உபகாரமாக அல்லது அன்றைய தேவைகளுக்காக புலிகள்இயக்கத்திற்கு அரசிடம் இருந்து பின்வரும் பொருட்கள் கைமாறியதாகச் சொல்லப்படுகிறது.
ஏழு தொன் வெடிமருந்து (எக்ஸ்புளோசிவ்)
ஐம்பது கலிபர் (மி.மீ உயர்ரக இயந்திரத்துப்பாக்கிகள் - ஐந்து
மூவாயிரம் றைபிள்கள் (ஏ.கே.47, எம்.16 ரகம்)
தொன்கணக்கில் தோட்டாக்கள்.
தொன் கணக்கில் பதுங்குகுழி (பங்கர்) கட்ட சீமெண்ட்.
அதற்கு பாவிக்க உருக்கு கேடர்கள் தொன்கணக்கில்.
பணம் கோடிக்கணக்கில்.
பிரேமதாசா அரசால் புலிகளுக்கு வழங்கப்பட்டதாக சொல்லப்படுகிறது.

இந்தியப்படைகள் குறிப்பிட்ட காலவரையறைக்குள் வட - கிழக்கில் இருந்து முற்றாக வெளியேற முடிவுசெய்து விட்டதால் இவற்றை பயன்படுத்தி மாகாணஅரசுக்கும், மக்கள் தொண்டர்படை (மாகாணபொலிஸ்) தமிழ் தேசிய இராணுவம் இவற்றுக்கு எதிராக புலிகளும் அரசபடைகளும் கூட்டாக தாக்குதல் தொடுத்தார்கள்.

இறுதியாக புலிகளின் வேண்டுகோளை ஏற்று வடக்கு கிழக்கு மாகாணஅரசு (தமிழ் பேசும் மக்கள் தங்களைத் தாங்களே ஆளும் அரசு) கலைக்கப்பட்டது.

மாகாண முதலமைச்சரின் அனுமதியில்லாமல் கலைக்கமுடியாத மாகாணஅரச பாராளுமன்றம் கொண்டு வந்த விசேட தீர்மானம் ஒன்றின் மூலம் பிரேமதாசா அரசால் கலைக்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியாக தம்மை பதிவுசெய்து கொண்ட புலிகள் தேர்தல்மூலம் மாகாணஅரசை கைப்பற்றும் வாய்ப்புஇருந்தும் ஜனநாயக வழிக்கு திரும்பவிரும்பாததால் 'வளர்த்தகடா மார்பில் பாய்ந்தது' போல தம்மை பலப்படுத்த உதவிய அரசுடன் புலிகள் மோத ஆரம்பித்தார்கள். இதனால் கடந்த இரண்டுவருடத்துக்கு மேலாக தமிழ்பேசும் மக்கள் மீண்டும் பேரழிவு தரும் யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது.

இதனால் தமிழ்மாநிலம் பேரழிவுக்கு உள்ளாகியதுடன் வடக்கு கிழக்கில் வாழ்ந்த தமிழ்மக்கள் பத்துலட்சக்கணக்கில் சொந்தநாட்டிலும், அயல்நாட்டிலும் அகதிகளாக அல்லல்படும்நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியல் ஜனநாயகம் கொலைசெய்யப்பட்டு விட்டதால் மக்கள் பேச்சுமூச்சற்ற நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

திருகோணமலை முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளிலிருந்து படையினரால் விரட்டியடிக்கப்பட்ட தமிழ்மக்களின் வாழ்விடங்கள் சிங்களவர்களினால் ஆயுதப்படையினரின் உதவியுடன் நிரப்பப்பட்டது.
திருகோணமலையில் தமிழர்கள் தமக்காக உருவாக்கிய சந்தை இன்று இராணுவக்கட்டுப்பாட்டில் இருக்கிறது. சிங்களவர் வாழும் பகுதியில் மட்டும் தான் மீன்சந்தை மரக்கறி சந்தை என்பன அமைந்து விட்டன. இவற்றை தொடர்ந்து பாதுகாப்பதற்காக பேரினவாதிகள் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றார்கள்.

புலிகளின், முஸ்லீம் மக்களுக்கு எதிரான மிலேச்சத்தனமான நடவடிக்கைகளால் தமிழ் முஸ்லீம் சமூகங்கள் பரஸ்பரம் அழிவுக்கு உள்ளாகிவருகின்றது. இதனால் இரு சமூகமும் பிளவுபடுத்தப்பட்டு விட்டது. இதைப் பேரினவாதிகள் நன்குபயன்படுத்தி தமிழ் இனத்துக்கு- தமிழ்பேசும் மக்களுக்கு பாரம்பரிய பிரதேசம் ஒன்று இல்லையென்று நிறுவ முனைகின்றார்கள். 'நெய்க்குடம் உடைந்தால் நாய்க்கு வேட்டை' என்பதுபோல் எம்மத்தியில் நிலவும் பிளவுகள் பேரினவாதிகளுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது.

இன்று தமிழ் இனத்தின் நிலை கடந்த இரண்டு வருடத்துக்கு இடையில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக முடிந்துவிட்டது. இவைகள்தான் புலிகள் பிரேமதாசா உறவு தமிழினத்துக்கு தந்த பரிசு.

**ஈழதாசன்-கொழும்பு**



www.padippakam.com

## பிரதேச செயலகங்கள்.....

வாத பட்சத்தில் வேலையில்லாமல் இருக்கின்ற அந்தத் தமிழ்த் தட்டெழுத்தாளரை வேலைக்கமைத்தால் அங்கு தமிழ் தட்டெழுத்தாளருக்கு, அவருக்குரியவேலையை அவர்செய்யமுடியாது. எனவே இத்தகைய பிரச்சனைகளை நீங்கள் தீர்க்க வேண்டும். அதற்கென ஒரு மாற்றுத்திட்டத்தை கொண்டுவர வேண்டும்.

அது மாத்திரமல்ல; கடந்த காலத்தில் அரசகருமமொழித்திணைக்களம் எனஒன்று செயற்பட்டது. அதற்குப் பொறுப்பாக சிங்களமொழிபேசுமஒருவர் பண்ப்பாளராக இருந்தார். இன்று தமிழ்மொழியும் அரச கரும மொழிஎன அங்கீகரிக்கப்பட்டு எத்தனை வருடங்களாகின்றன? இப்பொழுது அந்தத் திணைக்களம் அரசகரும மொழிகள் திணைக்களமாக இருக்கின்றது. தமிழ்மொழி அமுலாக்கல் என்ற திட்டமொன்று வந்தபின்னரும் கூட அங்கே தமிழ் பணிப்பாளரொருவரை நியமிப்பதற்கு யோசித்தீர்களா? தமிழ்மொழியை வளர்ப்பதற்கு, தமிழ்ப் பணிப்பாளரொருவர் அந்தத் திணைக்களத்திலே அவசியம் தேவை என்பதை நீங்கள் யோசிக்கவில்லையா? எனவே, அப்படியான அவசியம் ஒன்று ஏற்படுகின்ற பொழுது அதனை அமைச்சரவர்கள் தமது கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதுமட்டுமல்ல; தமிழ்மொழி அமுலாக்கலை முறையாகச் செயற்படுத்தப்படுவதற்கென தமிழ்மொழி அமுலாக்கல் ஆணைக்குழு ஒன்று கூட நியமிக்கப்பட்டு ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்கு மேலாகின்றன. இது தொடர்பாக இந்த ஆணைக்குழு இருவரை மேற் கொண்ட நடவடிக்கைகள் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். அந்த ஆணைக்குழுவில் கடமையாற்றுகிறவர்கள் சொல்லுகிறார்கள் "சிங்களத்தில் கடிதங்கள்வந்தால் அவற்றைத் தமக்குக் கொடுத்தால் அதுபற்றி தாங்கள் நேரடியாகக் கண்காணிப்போம்" என்று. எனவே, தமிழ்மொழி அமுலாக்கலைத் துரிதப்படுத்துமுகமாக மாற்று நடவடிக்கைகள் ஏதாவது இருக்கின்றனவா? இந்தப் பாராளுமன்றத்திலாயினும் சரி வெளியேயுள்ள திணைக்களங்கள் எவற்றிலாயினும் சரி ஏன் தமிழ்மொழி அமுலாக்கலைச் செய்யமுடியவில்லை என்பதை அமைச்சரவர்கள் ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகள் எதையும் அமைச்சரவர்கள் மேற்கொண்டுள்ளாரா என்பதையும் நான் அறியவிரும்புகிறேன்.
பொதுநிருவாக, மாகாணசபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் 1991ஆம் ஆண்டுக்கான முன்னேற்ற அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலே கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

> 'திடமானதும் அமைதியானதுமான ஒரு நிலையினை இலங்கையிலேயே உருவாக்குவதற்கு உதவும் ஒரு முக்கியமான அமைப்பு அரசகருமமொழித் திணைக்களம்'

மிகவும் அழகான வார்த்தைகளிலே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அரச கரும மொழிகள் திணைக்களத்திலே தமிழ்ப் பணிப்பாளர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படவில்லை என்பதுதான் உண்மையான நிலை. மொழிவழியாக உதவுவதே அதன் நோக்கம். அதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு தான் அமைச்சின் செயற்பாட்டறிக்கை மேற்கண்டவாறு தெரிவிக்கின்றது

> 'மொழிமூலம் இனரீதியான உடன்பாட்டையும் அமைதியையும் உருவாக்குவதே அதன் நோக்கம்'

என மேலும் அந்தச் செயற்பாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இனங்களுக்கிடையில் அமைதி – சமாதானத்தை மொழிகள் மூலம் அடைதல் என்பது தான் அதன் அர்த்தம் கௌரவ குழுக்களின் பிரதித்தவிசாளரவர்களே, இவையெல்லாம் மிகவும் அழகான வார்த்தைகளிலே இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழும் அரசகருமமொழி; தமிழும் உத்தியோகமொழி; அமைதியை உருவாக்குவதற்கு மொழிகள்மூலம் பாடுபட வேண்டும் என்று மிகவும் அழகாக எழுதிவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு நாங்கள் எவ்வளவுதூரம் கடுமையாகவும் ஆழமாகவும் செயற்படுகிறோம் என்பது தான் நான் இப்பொழுது கேட்கவிரும்பும் கேள்வியாகும். கௌரவ ஹமீத் அவர்கள் இச்சபையில் கூறியதுபோல இன்று இந்த நாட்டிலேயிருக்கக்கூடிய உத்தியோகஸ்தர்கள் இதுபற்றி எவ்வளவு ஆழமாகச் சிந்திக்கின்றார்கள்? இல்லையேலவர்களுக்கு ஏற்கனவே இருக்கக்கூடிய குரோதஎண்ணங்கள் இப்பொழுதும் இருக்கின்றனவா அவற்றை எவ்வாறு களையலாம் என்பதையும் ஆராயவேண்டும்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டிய பல்வேறு சட்டமூலங்கள் வெளியே தனியாரிடத்தில் கொடுக்கப்பட்டு மொழிபெயர்க்கப்படுகின்றன. ஆனால் அவர்களுக்குச் சேரவேண்டிய மொழிபெயர்ப்புக்கான பணம் கூட சரியாக கொடுக்கப்படுவதில்லை. உதாரணத்திற்கு இங்கே ஒன்றைக் கூற விரும்புகின்றேன். 'Transport Policy Bill' என்கின்ற சட்டமூலமொன்று வெளியே கொடுக்கப்பட்டு மொழிபெயர்க்கப் பட்டது. அந்த மொழிபெயர்ப்புக்கள் எல்லாம்முடிந்து மாதக்கணக்காகி விட்டது. அவர்கள் நான்கு ஐந்து கடிதங்கள் எழுதியும்கூட அந்த மொழிபெயர்ப்புக்கான பணம் இன்னமும் கொடுக்கப்படவில்லை. எவ்வளவு தூரத்துக்குத் தமிழ் மொழி அமுலாக்கலை நாம் செயற்படுத்துகின்றோம் என்பதை நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கௌரவ குழுக்களின் பிரதித் தவிசாளர் அவர்களே, உண்மையில் இதனை எம்மால் சிறப்பாகவும் சரியாகவும் செய்யமுடியும். ஏற்கனவே உத்தியோகத்திலிருந்து விலகிய 'பென்சன்' எடுத்த பலமொழிகளைத் தெரிந்த, இவற்றைச் செய்யக்கூடிய பலர் இருக்கிறார்கள்.
ஆகவே உடனடியாக நாம் செய்யவேண்டியது முக்கியமாக தமிழ் உத்தியோகத்தர்களுக்கான எண்ணிக்கையைப் பல்வேறுபட்ட திணைக்களங்களிலும் அலுவலகங்களிலும் அதிகரிக்க வேண்டும். அதன் மூலம் தான் முதலில் இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியுமென்று நான் நம்புகின்றேன். ஆகவே மேற்கண்ட விடயங்களைக் கௌரவ அமைச்சர் அவர்கள் தமது மேலான கவனத்திற்கெடுத்து இதற்கான ஒருதீர்வுக்கு வரவேண்டுமென நான் தாழ்மையுடன்வேண்டி எனதுஉரையைமுடிக்கின்றேன்.

## புலிகளால் கடத்தப்பட்ட செல்விக்கு விருது

யாழ் பல்கலைக்கழக மூன்றாம் ஆண்டு மாணவியான செல்வி என்றழைக்கப்படும் செல்வநிதிக்கு விருது கிடைத்துள்ளது. கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகளுக்காகவே, இவ்விருது வழங்கப் பட்டுள்ளது. உலகக் கவிஞர்கள், நாவலாசிரியர்கள், நாடக ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து நடாத்தும் பென் என்ற அமைப்பு 1992ம் ஆண்டின் "எழுதுவதற்கான சுதந்திரம்" என்னும் பெயரிலான விருதை 28 வயது நிரம்பிய செல்விக்கு வழங்கியுள்ளது. புலிகளால் ஒரு வருடத்திற்கு முன்பு கடத்தப்பட்ட செல்விக்கு என்ன நடந்ததென்பது தெரியவில்லை. அராஜக நடவடிக்கைகளை விமர்சித்தமைக்காகவே செல்வி கடத்தப்பட்டார்.

## அமைதிப்படை வெளியேறியபின்....

(மூன்றாம் பக்கத் தொடர்ச்சி.....)

இந்திய அரசுக்கு எதிர்கட்சிகளும், பத்திரிகைகளும் அமைதிப்படையை வெளியேற்ற வேண்டும் என நிர்ப்பந்தத்தை கொடுக்காதிருந்து, இந்திய அமைதிப்படை மேலும் ஒருவருட காலத்திற்கு இலங்கையிலிருந்திருந்தால் புலிகள் முற்றாக ஒழிக்கப்பட்டிருப்பார்கள். ஈழத்தமிழ் மக்கள் இப்போது அமைதியாக வாழ வழி ஏற்பட்டிருக்கும் ஆனால் அது நடைபெறவில்லை.

இந்திய அமைதிப்படை வெளியேறியபின் பிரச்சனை தீர்ந்து விட்டதா? ஈழப்பிரச்சினையில் இந்தியத் தலையீட்டை நிராகரிப்பதற்குப் பிரேமதாசா அரசு முயலுகிறது அதற்குப் புலிகள் துணைபோகின்றனர் இந்தியாவின் பங்களிப்பில்லாமல் ஈழப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என பத்மநாபா திரும்பத் திரும்பக் கூறினார்.

ராஜீவ்காந்தி படுகொலையைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி, மத்தியில் ஆட்சியமைத்த போதிலும், ராஜீவ்காந்தி செய்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கும், ஈழப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கும் எந்தவித முன்முயற்சியும் எடுக்காது, தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்ற நிலைப்பாட்டையே தற்போது எடுத்துள்ளது. இலங்கையிலும் இந்தியாவிலும் தமிழர்கள் இருக்கும்வரை இந்தியஅரசு இப்பிரச்சனையில் பாராமுகமாக இருக்கமுடியாது என்பதே நிதர்சன உண்மையாகும்.

## பதவிப் போட்டிக்காக புலிகள் துப்பாக்கிச்சண்டை

தனது பெயரை நிலைநாட்ட மேற்கொண்ட தந்திரங்களின் விளைவே கிரான்குளம், கும்புறுமூலை முஸ்லிம்மக்கள் மீதான படுகொலை எனவும் மாத்தையாவின் சார்புவாதிகளாகவும் முக்கியபொறுப்புக்கள் வகித்த பலர் கடாநாட்டுக்கு வெளியே வேலை செய்ய பிரபாகரனால் பணிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வகையான அணுகுமுறைகளைத் தொடர்ந்து பிரபாகரன் குழுவுக்கும் மாத்தையா குழுவுக்குமிடையில் கடுமையான மோதல்கள் பல இடங்களில் நடந்துள்ளன. குறிப்பாக முல்லைத் தீவிலுள்ள குமுழமுனை என்ற இடத்தில் பிரபாகரனின் மணலாறு குழுவினருக்கும் மாத்தையாவின் முல்லைத்தீவு குழுவினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் 36 புலிகள் இறந்துள்ளனர். இரண்டு நாட்களாக நடந்துள்ள மோதலில் அனைவரும் இறுதிவரை போராடியே இறந்துள்ளனர்.

புலிகளின் தலைமைக்குள் காலத்துக்கு காலம் எழும் பதவிப்போட்டிகளும், முரண்பாடுகளும் உருவாகும் போதெல்லாம் அவ்வகையானவர்களை போராட்டத்தின்பெயரால் கொலைக்

(நாலாம் பக்கம் பார்க்க..........)


ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE

POST BAG - 5551
MADRAS - 600094
INDIA.

B.M. BOX - 1738
LONDON-WCIN-3XX
U. K.


POST FACH - 100206
4600 DORTMUND - 1
GERMANY.

P. BOX 6800
AGINCOURT
ONTARIO M1S3C6
CANADA.

BOITE NO - 69
7 - RUE RACINE
95140 - GARGES
FRANCE.

POST BOKS - 115
GROURD HAGENEN
0905 - OSLO - 9
NORWAY.

POST BOX - 52
LAVERTON
VICTORIA - 3028
AUSTRALIA.

ஈழமக்கள்புரட்சிகரவிடுதலைமுன்னணியின் பிரச்சாரப்பிரிவான ஈழமக்கள்செய்திதொடர்புநிலையத்தின் ஐரோப்பியப்பிரிவினால் புதியபார்வை வெளியிடப்படுகிறது.